# போலீஸ் பார்வை

## POLICE PARVAI

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

மாத இதழ்

• மலர்-10 • Volume-10 • இதழ்-5 • Issue-5 • மார்ச்-2025 • March -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com


மாமனிதர்

**அபுல்கலாம் ஆசாத்**

இப்படியும் ஒரு முதல்வர்

**கர்மவீரர்**



மாணவர்களே..!

**அவர்தான் MGR**

அறிவோம்

**உத்தமதானபுரம் வேங்கட சுப்பையர் சாமிநாதன்**

## பூம்பாறையில் புறக்காவல் நிலையம்

SP A.பிரதீப் IPS திறந்து வைத்தார்




அஜினோமோட்டோ எனும் விஷம்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...

பங்குனி மாத சிறப்பு நாட்கள்


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846
Tamilnadu

# போலீஸ் பார்வை

மார்ச் 2025 மலர் 10 இதழ் 5



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L. S.ரவிச்சந்திரன் M.A., B.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S. ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.
Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,
Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by: QUEEN BEE CREATIVE




# மக்கள் பிரதிநிதிகளின் வேலை என்ன? உணர்ந்து செயல்பட வேண்டிய தருணம் இது..

பொதுமக்களாகிய வாக்காளப் பெருமக்கள் தங்களின் தொகுதிக்கு உட்பட்ட மக்களின் நலனுக்காகவும் வளர்ச்சிக்காகவும் தொகுதி மேம்பாட்டிற்காகவும் பொதுநலத்தோடு தங்களுக்கு நன்மை செய்பவர்கள் என்ற நம்பிக்கையோடு மக்கள் பிரதிநிதிகளுக்கு வாக்களித்து தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆனால், காலப்போக்கில் மக்கள் பிரதிநிதிகள் வியாபார நோக்கோடு, வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வாக்குகளை விலைக்கு வாங்கும் அவலமான சூழல்மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் தேர்தல் களப்பணியாளர்களுக்கு செலவுக்கு பணம், பிரச்சார விளம்பரத்துக்கு பணம் போன்ற அனைத்துக்கும் பணத்தை வாரி இறைத்தால்தான் அந்த பிரதிநிதிகள் வெற்றிபெறலாம் என்ற மனநிலைக்கு தள்ளப்படுகிறார். பல கட்சிகளை சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் தான் சார்ந்த கட்சிக்கும் கட்சி வளர்ச்சி நிதிக்கு பணம் செலுத்த வேண்டியுள்ளது. வாக்காளர்களாகிய பொதுமக்களும், தங்கள் வாக்கின் மகத்துவம் தெரியாமல் பணம் வாங்கிக் கொண்டு வாக்களிப்பதால் தேர்தல் என்பதே வியாபாரக் களமாக மாறிவிடுகிறது.

இத்தகைய சூழ்நிலையால், எம்.பி., எம்எல்ஏ-க்கள் பதவி ஏற்கும்போது எடுக்கும் சத்திய பிரமாண உறுதி மொழியின் சாராம்சம் தெரியாமல், தாம் ஏற்ற பதவியை துஷ்பிரயோகம் செய்து மக்களை வஞ்சிக்கின்றனர்.

தற்பொழுது மும்மொழி கல்வி கொள்கையிலும் இதே போக்கை கடைபிடித்து, மாணவ செல்வங்களின் கல்வித் தரத்தை குறைக்கும் செயல்பாடுகளை தவிர்க்க வேண்டும். ஒன்றை மறைக்க இன்னொன்று என்பதுபோல, மாணவிகள் பெரும் பாதிப்படையக்கூடிய பாலியல் வன்கொடுமைகள், மாணவர்களின் எதிர்காலத்துக்கு தீங்கு தரும் போதைப்பொருள் புழக்கம் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை முதன்மையாக கொள்ள வேண்டும்.

இதேபோல, அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் தொகுதி சீரமைப்பு வரைமுறைகளை எதிர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆலோசனை கூட்டம் நடத்துவது, தாங்கள் ஏற்றுக்கொண்ட சத்திய பிரமாணத்துக்கு உகந்த செயல்பாடுதானா என்பதை, சிந்தித்து செயலாற்ற வேண்டும். இதுவே, சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது. ✍ **ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

அகில இந்திய காவல்துறை திறனாய்வு போட்டியில் 2 பதக்கங்கள் பெற்ற

# காவல் ஆய்வாளருக்கு காவல் ஆணையர் திரு.பிரவின் குமார் அபினபு IPS அவர்கள் பாராட்டு

ஜார்கண்ட் மாநிலத்தின் தலைநகரம் ராஞ்சியில் கடந்த 10.02.2025 முதல் 15.02.2025 வரை 68-வது அகில இந்திய காவல்துறை திறனாய்வு போட்டி நடைபெற்றது.

தமிழ்நாடு சார்பாக சேலம் மாநகரம், கருப்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.A.நவாஸ் சட்டம் மற்றும் ஒழுங்கு அவர்கள் கலந்து கொண்டு குற்றவியல் சட்டங்கள் தேர்வில் (SCIENTIFIC AIDS TO INVESTIGATION (CRIMINAL LAWS) அகில இந்திய அளவில் வெண்கல பதக்கமும், தடய அறிவியல் திறனாய்வு தேர்வில் (FORENSIC SCIENCE WRITTEN EXAMINATION) அகில இந்திய அளவில் வெண்கல பதக்கமும் பெற்று சேலம் மாநகர காவல் துறைக்கு பெருமை சேர்த்துள்ளார். சேலம் மாநகர காவல் ஆணையர் திரு.பிரவிண் குமார் அபினபு IPS அவர்கள், காவல் ஆய்வாளர் திரு.A.நவாஸ் அவர்களை நேரில் அழைத்து பாராட்டி கௌரவித்தார்கள்.

தலைமை நிருபர்: P.ஜெகதீஷ், சேலம்.




# கடலூர் SP திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் தலைமையில் 'பெட்டிஷன் மேளா'



கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் தலைமையில் மாவட்டம் காவல் அலுவலகம் கூட்ட அரங்கில் பெட்டிஷன் மேளா நடைபெற்றது. காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் பொதுமக்கள் கொடுத்த புகார் மனுக்கள் சம்பந்தமாக காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரடியாக விசாரணை மேற்கொண்டு, புகார் மனுக்கள் சம்பந்தப்பட்ட உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள் உடனடியாக விசாரணை மேற்கொண்டு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.கோடீஸ்வரன், உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள் திரு.ரூபன்குமார், திரு.ராஜா, திரு.பாலகிருஷ்ணன், திரு.லாமேக், திரு.விஜிகுமார், திரு.மோகன் ஆகியோர்கள் பெட்டிஷன் மேளாவில் பங்கேற்றனர்.

சிறப்பு நிருபர்: P.முத்துக்குமரன், கடலூர்.






# செங்குன்றத்தில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையம்

## அமைச்சர் சா.மு.நாசர் திறந்து வைத்தார்

ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட செங்குன்றம் பகுதியில் பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டும் என பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில், அம்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டிய நிலை உள்ள நிலையிலும், அதிகளவில் வழக்குகள் வந்ததாலும், அவற்றை பிரித்து செங்குன்றம் காவல் நிலையத்தில் புதியதாக மகளிர் காவல் நிலையம் அமைக்க கடந்த ஆண்டு ஜுன் மாதத்தில் நடைபெற்ற தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்து, இன்று செங்குன்றம் காவல் நிலையத்தின் முதல் மாடியில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையத்தை சிறுபான்மை மற்றும் அயலக நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் திறந்து வைத்தார்.

புகாரளிக்க குழந்தைகளுடன் வரும் பெண்கள் தங்குவதற்கும், தாய் பால் கொடுக்கவும், குழந்தைகள் விளையாடும் கட்டடத்தையும் திறந்து வைத்த அவர், காவல் ஆய்வாளர் அறையை ஆய்வு செய்து புகாரளிக்கும் ஆவணங்கள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் புதியதாக திறக்கப்பட்ட மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் பெண் காவலர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

இந்த நிகழ்வில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரதாப், ஆவடி காவல் ஆணையர் சங்கர் IPS, செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையர் பாலகிருஷ்ணன், உதவி ஆணையர் ராஜா ராபர்ட், செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர் புருஷோத்தமன், மீஞ்சூர் காவல் நிலைய ஆய்வாளர் வேலுமணி, மாதவரம் சட்ட மன்ற உறுப்பினர் சுதர்சனம், பொன்னேரி சட்ட மன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முதன்மை ஆசிரியர்:
முருகானந்தம், ஆவடி.



தருமபுரி மாவட்டத்தில் பணிபுரிந்து வரும் தலைமையிட காவல் கூடுதல் கண்காணிப்பாளர் திரு.N.பாலசுப்பிரமணியன் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்கள் திரு.P.சொக்கலிங்கம் மற்றும் திரு.N.நாகராஜன் ஆகியோரின் சிறப்பான பணியை பாராட்டி 2020 -2021 ஆண்டிற்கான மத்திய உள்துறை அமைச்சகத்தால் வழங்கப்படும் Ati-Utkrisht Seva Padak/ Utkrisht Seva Padak என்ற பதக்கம்பெற தேர்வாகி இருந்தனர். அவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.S.மகேஸ்வரன் B.com., BL., அவர்கள் பதக்கம் அணிவித்து கௌரவித்தார்.

நிருபர்: விக்னேஷ், தருமபுரி.











மதுரை மாநகர ஆயுதப்படை மைதானத்தில் தமிழக காவல்துறையில் சிறப்பாக பணிபுரியும் அதிகாரிகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகத்தால் வழங்கப்படும் சிறந்த சேவைக்கான உத்கிருஷ்ட் சேவா (Utkrisht Seva) Padak 2020 மற்றும் 2021-ம் ஆண்டிற்கான பதக்கங்கள் பெற தேர்வு செய்யப்பட்டிருந்த மதுரை மாநகர் காவல் துறையின் காவல் கூடுதல் துணை ஆணையர் (போக்குவரத்து திட்டமிடுதல்) திரு.A.திருமலைக்குமார், நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எஸ்தர் மற்றும் தெப்பக்குளம் காவல் ஆய்வாளர் திரு.S.அருண்குமார் மற்றும் ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி N.ஹேமமாலா ஆகியோருக்கு மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ. லோகநாதன் IPS., அவர்கள் பதக்கங்களை வழங்கி, காவல் துறையின் மெச்சத் தகுந்த பணிக்காக வழங்கப்படும் இவ்விருது மேலும் பணியில் உத்வேகத்தை ஏற்படுத்தும் எனவும் விருது பெற்ற அனைவருக்கும் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) மற்றும் தல்லாகுளம் காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை.



இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (99) அதிகாரம்: இனியவை கூறல்

மனத்திற்கு இன்பம் தரும் சொற்கள் இருக்க, அவற்றை விட்டுவிட்டுத் துன்பம் தரும் சொற்களைக் கூறுவது, நல்ல பழம் இருக்க நச்சுக்காயை உண்பது போலாகும்.






## பாராட்டு!

காவல்ஆய்வாளர் திருமதி.அஜீம் அவர்களுக்கு சிறப்பான காவல் சேவை பணிக்கான விருதினை (ADHI UKRIT SEVA PADAK) திருச்சி மாநகரகாவல் ஆணையாளர் காமினி IPS.அவர்கள் வழங்கி பாராட்டினார்.

நிருபர்: B.ஸ்ரீனிவாசன், திருச்சி.



## ஜலோதர்நாசக் முத்திரை

சுண்டு விரலின் நுனியைப் பெருவிரலின் அடியில் வைத்து சுண்டு விரலின் பின்புறத்தைப் பெருவிரலால் மெதுவாக அழுத்தவும். யானைக்கால் நோய் அகலும். உடலின் எந்த பாகமும் வீங்கியிருந்தால் சரி செய்யும். கண்களில் நீர் வடிவதையும், மூக்கு ஒழுகுவதையும் பேதியாவதையும் சரி செய்யும். மாதவிலக்கு சமயம் அதிக இரத்தப் போக்கு இருப்பின் சரி செய்யும். சிறுநீர் அடிக்கடி வெளியேறுவது குறையும். சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க. **(இரண்டு கைகளிலும் செய்க...)**

# எடை பார்க்கும் இயந்திரத்தில் ஏற மறுத்த காமராஜர்



## இப்படியும் ஒரு முதல்வர்



இனி இப்படி ஒரு முதல்வரை நாம் பார்க்க முடியுமா ?
டெல்லியில் உலகக் கண்காட்சி நடந்த சமயம், அதன் துவக்க விழாவுக்கு அன்றைய பிரதமர் நேருவுடன் அன்றைய முதல்வரான காமராஜரும் சென்றிருந்தார்.

தற்பொழுது பேருந்து நிலையங்களிலும் இரயில் நிலையங்களிலும் வெகு சாதாரணமாகக் காணப் படுகிற எடை பார்க்கும் எந்திரம் அந்தக் கண்காட்சியில் அறிமுகமாகியிருந்தது.

நேரு எந்திரத்தில் ஏறி நின்று ஒரு ரூபாய் காசு போட்டு எடை பார்த்தார். மத்திய அமைச்சர்கள் பலரும் அவ்வாறே செய்தனர். காமராஜர் மட்டும் சற்றே ஒதுங்கி நின்றிருந்தார்.

நேரு அவரையும் எடை பார்க்கும் படி கட்டாயப் படுத்தினார். அவரோ மறுத்துவிட்டார். சுற்றி நின்றிருந்தவர்களுக்கு, திகைப்பு பிரதமர் சொல்லியும் காமராஜர் மறுக்கிறாரே என்று.

அப்பொழுது நேரு சொன்னார்; ‘‘காமராஜர் எதற்கு மறுக்கின்றார் என்று எனக்குத் தெரியும், இந்த எந்திரத்தில் ஏறி நின்று போடும் ஒரு ரூபாய் காசு கூட இபொழுது அவரிடம் இருக்காது’’ என்றார்.

பிறகு, காமராஜருக்கு தானே காசு போட்டு எடை பார்த்தார் நேரு.

ஒரு ரூபாய் காசு கூட வைத்து கொள்ளாத அப்பழுக்கற்ற முதல்வர் கர்மவீரர் காமராஜர்.

## காவல் ஆய்வாளர் திரு.K.சீனிவாசன் அவர்களை பாராட்டிய காவல் ஆணையர் திரு.அருண் IPS அவர்கள்



கொலை முயற்சி வழக்கில், சிறப்பான முறையில் புலனாய்வு செய்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, 16-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் 2 எதிரிகளுக்கு தலா 10 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.5000/- அபராதம் என கடுமையான தண்டனை பெற்றுத் தந்த அப்போதைய வியாசர்பாடி காவல் ஆய்வாளர் திரு.K.சீனிவாசன் அவர்களை சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு.அருண் IPS அவர்கள் நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.

சிறப்பு நிருபர்: LNK.சந்தன், சென்னை.


செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**


## துவாக்குடி காவல் உதவி ஆய்வாளர் திரு.நாகராஜ் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய SP திரு.செ.செல்வநாகரத்தினம் IPS அவர்கள்

திருச்சி மாவட்டம், துவாக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அண்ணாவளைவு அருகே செல்போனை தவறவிட்டதாக பெண் ஒருவர் அளித்த புகாரில் உடனடியாக விசாரணை மேற் கொண்டு ஒரு மணி நேரத்தில் செல்போனை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்த துவாக்குடி காவல் உதவி ஆய்வாளர் திரு.நாகராஜ் அவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப் பாளர் திரு. செ.செல்வநாகரத்தினம் IPS அவர்கள் நற்பணி சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

தலைமை நிருபர்: N.ராக்கேஷ் சுப்ரமணியன், திருச்சி.



# பங்குனி மாத சிறப்பு



பங்குனி 15 (29-03-2023) சனி பகவான், கும்ப ராசி பிரவேசம்; புதன் மேஷ ராசிக்கு மாறுதல்.

பங்குனி 24 (07-04-2023) சுக்கிரன், ரிஷபராசிக்கு மாறுதல் நமக்கு நல்லதை பெற்றுத் தரும். மேலும், ஸ்ரீ மத் பகவத் கீதை, ஸ்ரீ மத் மகாபாரதம், ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம் படிப்பது மிகவும் விசேஷம்.



ஸ்ரீராம நவமி: பங்குனி 16 (30-3-2023)- ஸ்ரீ ராம நவமி. பிறவியில், எத்தகைய துன்பங்கள் நேரிடினும், தர்ம நெறியிலிருந்து, பிறழக்கூடாது என்ற தர்மத்தை பகவான் ஸ்ரீமந் நாராயணன், மிகக் கொடிய துன்பங்களை அனுபவித்த நிலையிலும், நேர்மையிலிருந்து தவறாது வாழ்ந்துகாட்டிய ஸ்ரீராமபிரான், அவரது சகோதரர்களாகிய, பரதன், லட்சுமணன், சத்ருக்கனன் ஆகியோருக்கு, விதேக ராஜ்ஜியத்தின் தலைநகராகிய மிதிலையில் திருமணம் நடந்த மாதமும் இந்தப் பங்குனியில்தான்!!





கூர்மாவதாரம்: பங்குனி 12 (26-3-2023) - ஸ்ரீகூர்ம ஜெயந்தி. தேவர்களும், அசுரர்களும் அமுதம் வேண்டி மந்திர மலையை மத்தாக்கி, வாசுகியை கயிறாகவும், கொண்டு கடைந்தபோது, மந்திர மலையைத் தாங்குவதற்காக ஸ்ரீமகாவிஷ்ணு கூர்ம அவதாரம் (ஆமை வடிவில்) எடுத்த, புண்ணிய தினம்.




தெய்வீகத் திருமணங்கள்: பங்குனி 22 (5-4-2023)- இந்நன்னாளில் முருகப் பெருமானைத் திருமணம் புரிய வள்ளி அவதரித்தாள். மேலும், பார்வதி மைந்தனாகிய முருகப் பெருமான் தெய்வானையைக் கைத்தலம் பற்றிய புண்ணிய தினமும் இந்தப் பங்குனி உத்திரம் தான். தனது பக்தியினால், திருவரங்கத்து இன்னமுதனாகிய ஸ்ரீ ரங்கநாதனைக் கரம்பற்றிய பெருமையும் இப் பங்குனி மாதத்தையே சாரும்.



சிவ பரம்பொருளின் பரம பக்தையான காரைக்கால் அம்மையார் தனது சிரசாலேயே கடந்து சென்று, திருக் கையிலையில், "அம்மையே! அப்பா!!" என பக்திப் பெருக்கால், கயிலைகிரியில் இறைவனுடன் இணைந்துவிட்ட நன்னாள் இந்தப் பங்குனி உத்திரம் என்பதை நினைக்கும்போது, உள்ளமெல்லாம் சிலிர்க்கின்றது.



பங்குனி 27 (10-04-2023): ஸ்ரீ வராக ஜெயந்தி. ஸ்ரீ மகாவிஷ்ணு, வராகமாக (பன்றியுருவாக) உருவெடுத்து, அசுரர்களிடமிருந்து பூமா தேவியை மீட்ட புண்ணிய தினம். தமிழ் வருடப் பிறப்பின் கடைசி மாதம் இந்தப் பங்குனி. நிச்சயதார்த்தம், திருமணம் போன்ற சுப முகூர்த்தங்களை நடத்துவதற்கு ஏற்ற மாதம் இந்தப் பங்குனியே!



விவாகமான பெண்மணிகள், தங்கள் கணவரின் ஆரோக்கியம், ஆயுள் அபிவிருத்தி, உத்தியோகம், தொழில் முன்னேற்றம் ஆகியவற் றிற்காக விரதமிருந்து, ஸ்ரீதர்ம ராஜருக்கு, வெண்ணெய், காரடை நைவேத்தியம் செய்து, பூஜித்து, மங்கலச் சரடு அணிய வேண்டிய சுப முகூர்த்த நேரம்! அதிகாலை 5.00 மணியிலிருந்து, 6.00 வரை.






***மேஷ ராசி அன்பர்களே,*** கலவையான பலன்களைத் எதிர்பார்க்கலாம். திட்டமிட்ட பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இடத்தில் இருந்து நல்ல தகவல் ஒன்று வரும். மனக்கவலைகள் அடியோடு மறையும். குடும்பத்தில் முக்கிய விசேஷங்கள் நடக்கும். கொடுக்கல், வாங்கல் திருப்தியாக இருக்கும். தேவையற்ற ஆடம்பர செலவுகளை தவிர்க்கவும். வாக்குவன்மையால் நன்மைகள் ஏற்படும். தெய்வ சிந்தனை அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். நீண்ட நாட்களாக நடந்து முடியாத காரியம் ஒன்று நடக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். இழுபறியாக இருந்த காரியம் நன்கு நடந்து முடியும். மனதில் தேவையில்லாத விஷயங்களை போட்டு குழப்பிக்கொள்ள வேண்டாம். நண்பர்கள் உங்களை தேடி வந்து உதவி செய்வர். பிரியமானவர்களிடம் விட்டு கொடுத்து போவது சிறப்பு. உறவினர்களிடம் பண விஷயத்தில் மனஸ்தாபம் வர வாய்ப்புள்ளது. கணவன், மனைவிக்கிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அதிகரிக்கும். முக்கிய காரியங்களில் ஏதேனும் தடை ஏற்பட்டால் தெய்வ வழிபாட்டின் மூலம் அதை சரி செய்து கொள்ளவும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். பழைய வீட்டில் இருந்து புது வீட்டிற்கு மாற வேண்டிவரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உங்கள் விருப்பங்களை எதுவாகினும் அது நிறைவேற்ற வழி கிடைக்கும். மாதத்தின் பிற்பகுதியில் சூழ்நிலைகள் சாதகமாக மாறுவதைக் காணலாம். உத்யோகத்தில் இருப்பவர்களை தேவையற்ற இடத்திற்கு மாற்ற வேண்டியிருக்கும். தொழில், வியாபாரம் சிறக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: அம்பாள், ஸ்லோகம்: லெஷ்மி கவசம், பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் ராகுகால வேளையில் துர்கைக்கு நெய்தீபம் ஏற்றுவது, சந்திராஷ்டமம்: பங்குனி மாதம் 5 (19/03/2025) புதன்கிழமை பகல் மணி 12.21 முதல் பங்குனி 7 (21/03/2025) வெள்ளிக்கிழமை இரவு 10.41 மணி வரை.**

---




***ரிஷப இராசி அன்பர்களே,*** இந்த மாத பலன்படி, நீங்கள் எந்த அளவிற்கு நேர்மையாக உழைத்து முயற்சி செய்கிறீர்களோ, அதற்கேற்ப அதிக பலன்களைப் பெற முடியும். உங்கள் முக்கிய காரியங்கள் நாளடைவில் நிறைவேறும். பொருள் வரவு கூடும். குடும்பத்தில் மதிப்பு தானாக உயரும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவி கிடைக்கும். எவ்வளவு சம்பாதித்தாலும் அது போதாமல் வெளியில் கைமாற்ற பணம் வாங்க வேண்டியிருக்கும். திருமணம் தொடர்பான பேச்சுக்கள் சுமூகமாக நடைபெற்று முடியும். குடும்பத்தில் பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய வாகன வசதி மற்றும் புதிய வீடு, பேறு அமையவும் வாய்ப்புண்டு. சொத்து பிரச்சனைகளில் சாதகமான தீர்ப்பு கிடைத்து அதன் மூலம் பணம் கைக்கு வரும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கும் ஏற்படும். குடும்பத்தில் செலவுகளும் ஒரு சில பிரச்சனைகளும் வரக்கூடும். அலைச்சல்கள் குறையும். நீண்ட நாட்களாக திட்டமிட்டு இருந்த தெய்வ வழிபாட்டை தவறாமல் மேற்கொள்ளவும். உடல் நலத்தை பொறுத்தவரை எந்த பிரச்னையும் இருக்காது. எதிரிகள் விஷயத்தில் கவனம் தேவை. பண விவகாரங்களில் யாரையும் நம்ப வேண்டாம். குடும்ப பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும், உறவுகளை மேம்படுத்துவதிலும் கவனம் தேவை. வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். உயர் அதிகாரிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும். வெளிநாட்டில் ஒரு தொழிலைத் தொடர முயற்சித்துக் கொண்டிருந்தால், இந்த மாதம் உங்கள் விருப்பம் நிறைவேறக்கூடும். தொழில், வியாபாரத்தில் உள்ள நுணுக்கங்கள் புரியவரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: குரு, ஸ்லோகம்: குரு அஷ்ட்டகம், பரிகாரம்: ஞாயிற்றுக்கிழமைகளில் அம்பாளுக்கு ரோஸ் மாலை அணிவிப்பது, சந்திராஷ்டமம்: பங்குனி 7 (21/03/2025) வெள்ளிக்கிழமை இரவு 10.42 மணி முதல் பங்குனி 10 (24/03/2025) திங்கள்கிழமை காலை 6.45 மணி வரை.**

---




***மிதுன இராசி அன்பர்களே,*** இந்த மாத பலன்படி, திட்டமிட்ட பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். எந்தவொரு வேலையையும் அடுத்த நாள் வரை தள்ளி வைக்க வேண்டாம். குடும்பத்தில் புது திட்டங்கள் நிறைவேறும். எதிர்பார்க்கும் காரியங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கும். உங்கள் மனம் மகிழ்ச்சியில் துள்ளும். போதிய வருமானம் தங்கு தடையின்றி கிடைக்கும். உங்களது அன்றாட பணிகளை காலம் தாழ்த்தாமல் செய்யவும். ஆன்மீக காரியங்களில் நாட்டம் உண்டாகும். குடும்பத்தினருடன் சென்று பிராத்தனையை செய்யவும். பயணங்களால் வீண் அலைச்சல் ஏற்படலாம். வேண்டியவர்களிடம் அனுசரித்து பேசுவது நல்லது. நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். எந்த காரியத்திலும் நெருக்கடியான நிலை உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனம் விரும்பிய பொருட்களை வாங்க முடியும். குடும்ப செலவுகளை கட்டுப்படுத்த சிக்கனத்தை கடைபிடிப்பது நல்லது. கைமாற்றாக கொடுத்த பணம் திரும்ப வர தாமதமாகும். வெளியில் யாரை நம்புவது என்ற குழப்பம் ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். பிரியமானவர்கள் வழியில் சில அனுகூலமான பலன் உண்டு. நண்பர்கள் மூலம் புதிய வசதிகள் கிடைக்கும். எதிலும் பதற்றமடையும் போக்கை கைவிட்டு நிதானமாக நடந்துகொள்ள பழகவும். தேவையற்ற இடத்திற்கு இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உத்யோகத்தில் இருப்பவர்கள் தங்கள் வேலையை சரியான நேரத்தில் முடிக்க முயற்சிக்க வேண்டும். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். தொழில், வியாபாரத்தில் நிறைய சாதிக்க முடியும். சந்திராஷ்டம தினங்களில் கவனமாக இருக்கவும், புதிய முயற்சிகள் வேண்டாம்.

**வணங்க வேண்டிய தெய்வம்: துர்க்கை, ஸ்லோகம்: துர்கா கவசம், பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் அம்பாளுக்கு அர்ச்சனை செய்வது, சந்திராஷ்டமம்: பங்குனி மாதம் 10 (24/03/2025) திங்கள்கிழமை காலை 6.46 மணி முதல் பங்குனி 12 (26/03/2025) புதன்கிழமை பகல் 12.20 மணி வரை.**

---




***கடக இராசி அன்பர்களே,*** இந்த மாத பலன்படி, உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும். தொடர் அலைச்சல் காரணமாக உடல் மற்றும் மன சோர்வை அனுபவிக்க நேரிடும். சாட்சி கையெழுத்து போட வேண்டாம். தெய்வ வழிபாடு மூலம் நல்லது நடக்கும். சில நேரங்களில் திட்டமிட்டு செயலாற்றுவதில் பின்னடைவு ஏற்படலாம். பக்தியில் நாட்டம் அதிகரிக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.

கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் சிரமம் இருக்கும். குடும்பத்தில் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.புது நண்பர்கள் வகையில் ஆதாயம் உண்டு. நீங்கள் எதிர்பார்த்ததும், எதிர்பாராததும் இரண்டுமே சீக்கிரத்தில் நடந்து முடியும்.

பல நாட்களாக இழுபறியில் இருந்த பணம் கூட கைக்கு வந்து சேரும். சொத்து விவகாரங்களில் சிக்கல்கள் வர வாய்ப்புள்ளதால், சற்று கவனமாக இருக்கவும். வீண் வாக்குவாதங்களை முடிந்தவரை தவிர்க்கவும். குடும்ப பிரச்சனைகளை சமாளிக்க வேண்டிவரும். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து போவது நல்லது. அடிப்படை தேவைகள் அதிகரிக்கும். குடும்ப நபர்களிடம் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் பக்கபலமாக இருப்பர். குடியிருக்கும் வீட்டை மாற்ற நேரிடும். பழைய கடனை அடைக்க புது வழி கிடைக்கும்.

வாகன பராமரிப்பு செலவு அதிகமாகும். பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பழைய சொந்தங்களை சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். உங்கள் துணையுடன் ஏதாவது ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

நீண்ட காலமாக வேலை தேடிக்கொண்டிருந்தால் சில நல்ல வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். தொழிலில் குறிப்பிடத்தக்க லாபத்தை ஈட்ட முடியும். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. புது தொழில், யோகம் அமையும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சித்தர்கள் சமாதி, ஸ்லோகம்: திருப்புகழ், பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் பைரவருக்கு அர்ச்சனை செய்வது, சந்திராஷ்டமம்: பங்குனி 12 (26/03/2025) புதன்கிழமை பகல் 12.21 மணி முதல் பங்குனி 14 (28/03/2025) வெள்ளிக்கிழமை மாலை 4.02 மணி வரை**




**சிம்ம இராசி அன்பர்களே,** இந்த மாத பலன்படி, நீங்கள் திட்டமிட்ட பணிகளை பொறுமையுடன் முடிக்க முயற்சிக்க வேண்டும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சுற்றி இருப்பவர்களுடன் இருந்தகருத்து மோதல்கள் நீங்கும். குடும்ப நபர்களிடம் மனம் கோணாமல் நடந்துகொள்ளவும். நீங்கள் எதிர்பார்க்கும் இடத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். திட்டமிட்ட காரியங்கள் சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் செலவு கட்டுக்குள் இருக்கும். காரிய தடைகள் நீங்கும். தொட்டதெல்லாம் துலங்கும். கொடுக்கல் வாங்கலில் கவனமாக செயல்படுவது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் குறையும். வெளிநாடு சென்று வரும் யோகம் உண்டாகும். புதிய நண்பர்கள் அறிமுகமாவர். உற்றார், உறவினர்கள் மூலம் சிக்கலும், பண விரயமும் வர வாய்ப்புண்டு. புதிய வண்டி, வாகனங்களை வாங்க முடியும். கணவன் மனைவியிடையே இருந்த கருத்து வேறுபாடு விலகும். கோர்ட் வழக்கில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். கிடைக்க வேண்டிய நல்லது அனைத்தும் ஒவ்வொன்றாக கிடைக்கும். குடும்பத்தில் பல வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் அதை சிரமம் இன்றி சமாளிக்க முடியும். குடும்பத்தில் சலசலப்புகள் நீங்கி கலகலப்பு ஏற்படும். பழமையான விஷயங்களில் ஆர்வம் கூடும். வேலை தொடர்பாக நீண்ட அல்லது குறுகிய தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் சில சலுகைகள் கிடைக்கும். ஏற்கனவே செய்த முதலீடுகளில் இருந்து பெரிய லாபம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிறைய கற்றுக்கொள்ள முடியும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவ பெருமான், ஸ்லோகம்: சிவ புராணம், பரிகாரம்: சிவனுக்கு நெய் தீபம் அர்ச்சனை செய்வது, சந்திராஷ்டமம்: பங்குனி 14 (28/03/2025) வெள்ளிக்கிழமை மாலை 4.03 மணி முதல் பங்குனி 16 (30/03/2025) ஞாயிற்றுக்கிழமை 6.36 மணி வரை.**




**கன்னி இராசி அன்பர்களே,** இந்த மாத பலன்படி, கையில் எடுத்த வேலைகளை சிறப்பான முறையில் செய்ய முடிக்க முடியும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். சில முக்கிய பொறுப்புகள் உங்களை நம்பி தரக்கூடும், மேலும் அவற்றை நிறைவேற்ற நீங்கள் அதிக கடின உழைப்பையும் முயற்சியையும் செலுத்த வேண்டியிருக்கும். சொன்ன சொல்லை காப்பாற்ற சிரம பட வேண்டியிருக்கும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் ஏற்படும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சாதகமான சூழ்நிலை நிலவும். வாழ்க்கை தரம் வெகுவாக உயரும். மனதில் பட்டதை வெளிப்படையாக பேசுவதால் சில பிரச்சனைகள் வரும். சில பெரிய செலவுகள் திடீரென்று எழக்கூடும், அதற்காக நீங்கள் பணம் கடன் வாங்க வேண்டியிருக்கும். உங்கள் அனுபவ அறிவை பயன்படுத்த நிறைய சந்தர்ப்பங்கள் வரும். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியும். முன் கோபத்தை கட்டுப்படுத்தினால் பல வகையில் நன்மை உண்டாகும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளின் மூலம் தன வரவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வருமானத்திற்கு மீறிய செலவுகள் இருப்பதால் அனாவசிய செலவுகளை அறவே தவிர்க்கவும். தூரத்து பயணங்கள் மேற்கொள்ள வேண்டிவரும். பணியிடத்தில் அதிக எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். வேலை செய்பவர்கள் சில தேவையற்ற மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் பாராட்டு கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமான், ஸ்லோகம்: சிவபுராணம், பரிகாரம்: சிவனுக்கு நெய் தீபம், சந்திராஷ்டமம்: பங்குனி 16 (30/03/2025) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.37 மணி முதல் பங்குனி 18 (01/04/2025) செவ்வாய்க்கிழமைஇரவு 9.00 மணி** வரை




**துலாம் இராசி அன்பர்களே,** இந்த மாத பலன்படி, பல முக்கிய சவால்களையும், விவாதங்களையும் எதிர்கொள்ள வேண்டிவரும். மனதில் ஏற்பட்ட சங்கடங்கள் தீரும். உங்கள் அன்றாட பணிகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குழப்பமான சூழ்நிலையில் எந்த முக்கிய முடிவுகளையும் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். உடல் மற்றும் மன பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். திடீரென ஏற்படும் பெரிய செலவுகள் காரணமாக நிதி நிலைமை பாதிக்கப்படலாம். குடும்பத்தில் வருமானத்தை விட செலவு அதிகமாக இருக்கும். பணவரவு எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டாலும் தேவை பூர்த்தியாகும். உங்களை சுற்றி இருப்பவர்களிடம் அன்பாக பழகுவது நன்மை தரும். உறவினர் வகையில் சின்ன சின்ன மனவருத்தம் ஏற்படலாம். குடும்பத்தில் சுபகாரியங்களுக்கான ஏற்பாடுகள் நிம்மதியைத் தரும். எதையும் திட்டமிட்டு செயல்படுவது எல்லா வகையிலும் சிறப்பு. நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். பொருளாதாரத்தில் வளர்ச்சி உண்டாகும். வீடு, வாகன பராமரிப்பு செலவு அதிகமாகும். அடிக்கடி பயணங்களால் அலைச்சல் ஏற்படும். பிரபலங்களின் அறிமுகவும், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். மறைமுக எதிரிகளின் தொல்லை நீங்கும். பெரியோர்களின் அன்பும், ஆசியும் கிட்டும். உடல் உபாதைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை உண்டாகலாம். சுய முயற்சியால் வாழ்வில் முன்னேற்றம் நிச்சயம் உண்டு. புது முயற்சிகளை சிறிது காலம் தள்ளிப் போடுவது நல்லது. எப்போதும் நிதானத்தை கடைபிடிப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். வேலையில் இருப்பவர்கள் திடீரென்று தேவையற்ற இடத்திற்கு மாற்றப்படலாம். பயணிக்கும்போது உங்கள் உடல் நலம் மற்றும் உடமைகளில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். உத்யோக மாற்றம் ஏற்படும். தொழில், வியாபாரம் சிறப்பாக அமையும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: நவக்கிரஹ செவ்வாய், ஸ்லோகம்: கந்த குரு கவசம், பரிகாரம்: முருகனுக்கு நெய் தீபம் அர்ச்சனை, சந்திராஷ்டமம்: மாசி 21 (5/03/2025) புதன்கிழமை பகல் 1.01 மணி முதல் மாசி 23 (07/03/2025) வெள்ளிக் கிழமை மாலை 4.09 மணி வரை, பங்குனி 18 (1/04/2025) செவ்வாய்க்கிழமை இரவு மணி 9.01 முதல் பங்குனி 20 (3/04/2025) வியாழக்கிழமை இரவு 12.00 மணி வரை.**




**விருச்சிக இராசி அன்பர்களே,** இந்த மாத பலன்படி, எந்த வேலையிலும் கவனக்குறைவாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். குடும்பத்தில் முக்கியமான முடிவையும் மிகவும் யோசித்த பின்னரே எடுக்க வேண்டும். பண பரிவர்த்தனை செய்யும்போது கவனமாக இருக்க வேண்டும். இந்த மாதம் தேக ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியிருக்கும். பல நாட்களாக இழுபறியில் இருந்த காரியங்களை சீக்கிரத்தில் முடிக்க முடியும். எந்த ஒரு விஷயத்தையும் ஒரு முறைக்கு பல முறை சிந்தித்து செய்யவும். மனதில் ஏதாவது குறை இருக்கும். எதிர்பாலினத்தவர்களிடம் பேசும் போது கவனமாக பேசி பழகுவது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். வாக்குறுதிகள் கொடுக்கும் போது கவனம் தேவை. சேமிப்பில் கவனம் செலுத்தினால் பல வகையில் நன்மை அடையலாம். குடும்பத்தில் சந்தோஷம் அதிகமாகும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் இருக்கும். தேவையான பொருள் சேர்க்கை உண்டாகும். புது வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. குடும்ப செலவை சமாளிக்க தேவையான பண உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். வாழ்க்கைத்துணை வழியில் நற்செய்தி உண்டு. கொடுக்கல் வாங்கலில் சில சிரமங்கள் இருக்கும். பெற்றோருடன் கருத்து வேறுபாடு ஏற்படும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் வந்து விலகும். உத்யோகத்தில் பணிகளை கவனமாக கையாளவும். உத்யோகத்தில் எதிர்பார்ப்புகள் அதிகமாகும். தொழில், வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: நவக்கிரஹ புதன், ஸ்லோகம்: புதன் காயத்ரி, பரிகாரம்: புதன் பகவானுக்கு நெய் தீபம், சந்திராஷ்டமம்: மாசி 23 (7/03/2025) வெள்ளிக்கிழமை மாலை 4.10 மணி முதல் மாசி 25 (09/03/2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 8.55 மணி வரை, பங்குனி 20 (3/4/2005) வியாழக்கிழமை இரவு மணி 12.01 முதல் பங்குனி 23 (6/4/2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.33 மணி வரை.**




**தனுசு இராசி அன்பர்களே,** இந்த மாத பலன்படி, ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் தேவையற்ற செலவுகளைத் தவிர்க்க வேண்டும். உங்களுக்கு எதிராக நின்றவர்கள் கூட ஆதரவாக இருப்பர். ஆடம்பரப் பொருட்களுக்கு அதிக அளவு பணம் செலவிட நேரிடும். எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன் ஒரு முறைக்கு பல யோசித்து செய்வது நல்லது. எதிலும் வெற்றியும் சந்தோஷமும் கிடைக்கும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகளில் தீர்வு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் எடுத்துக்கொள்ளவும். வரும் வாய்ப்புகளை சரியான விதத்தில் பயன்படுத்தி கொண்டால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம். பண வரவு வெளியில் சொல்லும்படி இருக்கும். உங்கள் கஷ்டங்கள் எல்லாம் விலகி விடும். புதிய பாதையில் பயணிக்க விருப்பம் ஏற்படும். அடுத்தவர் செய்ய தயங்கும் காரியத்தை கூட தைரியமாக செய்ய முடியும். மற்றவர்களை கவரும் திறமை உங்களிடம் நிறைவே இருக்கும். யாரிடமும் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம். உங்களை சுற்றி இருப்பவர்களின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளவும். ஆன்மீக ஆர்வம் கூடும். கொடுக்கல் வாங்கலில் அவசரம் காட்ட வேண்டாம். புதிதாக ஏதேனும் செய்ய விரும்பினால் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. வேலை செய்பவர்களுக்கு தங்கள் மேலதிகாரிகளுடன் மோதல்கள் ஏற்படக்கூடும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பாதையில் செல்லும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: நவக்கிரஹ சுக்கிரன், ஸ்லோகம் : சுக்கிரன் காயத்திரி, பரிகாரம்: சுக்கிர பகவானுக்கு நெய் தீபம் அர்ச்சனை, சந்திராஷ்டமம்: மாசி 25 (9/03/2025) ஞாயிற்றுக் கிழமை இரவு 8.56 மணி முதல் மாசி 28 (12/03/2025) புதன்கிழமை அதிகாலை 3.54 மணி வரை.**

---




***மகர ராசி அன்பர்களே,*** *இந்த மாத பலன்படி, எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் மிகுதியாக இருக்கும். மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். எந்தவொரு பெரிய விஷயத்தையும் செய்வதற்கு முன்பு குடும்ப பெரியோரின் அறிவுரையை கேட்டு செய்யவும். காதல் துணை அல்லது துணைவருடன் ஏதாவது ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்படலாம். குடும்பப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளவும். எந்த விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. எப்போதும் நிதானமாக பேசி செயல்படுவது காரிய வெற்றிக்கு உதவும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். வீட்டில் அனாவசிய செலவுகளை குறைக்கவும். உங்கள் வித்தியாசமான அணுகுமுறையாலும் சாதுரியமான பேச்சாலும் எதையும் சாதிக்க முடியும். சமுதாயத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். வாழ்க்கைக்கு தேவையான வசதி வாய்ப்புகளை பெருக்கிகொள்ள முடியும். கணவன் மனைவி உறவில் நல்ல புரிதல் இருக்கும். கடன் பிரச்சனைகள் ஒரு பக்கம் இருந்தாலும் அதை அடைக்கவும் வழி கிடைக்கும். மன திருப்தியுடன் செய்யும் காரியம் வெற்றி பெரும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கும். குடியிருக்கும் வீட்டை மாற்ற வேண்டிய சூழல் ஏற்படும். வாகன யோகம் உண்டு. எப்போதும் இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்படவும். எந்தவிதமான சர்ச்சைகளிலிருந்தும் விலகி, உங்கள் இலக்குகளில் கவனம் செலுத்த வேண்டும். உத்யோகத்தில் ஆதரவு பெருகும். ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதற்கு முன்பு ஆலோசனையை பெற்று செய்யவும்.*

***வணங்க வேண்டிய தெய்வம்: நவக்கிரஹ சனீஸ்வரர், ஸ்லோகம்: சனிஸ்வரர் காயத்திரி, பரிகாரம்: சனீஸ்வர பகவானுக்கு நெய் தீபம், சந்திராஷ்டமம்: மாசி 28 (12/03/2025) புதன்கிழமை அதிகாலை 3.55 மணி முதல் மாசி 30 (14/03/2025) வெள்ளிக்கிழமை பகல் 1.26 மணி வரை.***

---




***கும்ப ராசி அன்பர்களே,*** *அன்பர்களே, இந்த மாத பலன்படி, எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் மிகுதியாக இருக்கும். மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். எந்தவொரு பெரிய விஷயத்தையும் செய்வதற்கு முன்பு குடும்ப பெரியோரின் அறிவுரையை கேட்டு செய்யவும். காதல் துணை அல்லது துணைவருடன் ஏதாவது ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்படலாம். குடும்பப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளவும். எந்த விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. எப்போதும் நிதானமாக பேசி செயல்படுவது காரிய வெற்றிக்கு உதவும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். விருந்து, விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியும். வீட்டில் அனாவசிய செலவுகளை குறைக்கவும். குடும்ப நபர்களின் ஒத்துழைப்பு நல்ல விதமாக இருக்கும். உங்கள் வித்யாசமான அணுகுமுறையாலும் சாதுரியமான பேச்சாலும் எதையும் சாதிக்க முடியும். சமுதாயத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். வாழ்க்கைக்கு தேவையான வசதி வாய்ப்புகளை பெருக்கிகொள்ள முடியும். கணவன் மனைவி உறவில் நல்ல புரிதல் இருக்கும். கடன் பிரச்சனைகள் ஒரு பக்கம் இருந்தாலும் அதை அடைக்கவும் வழி கிடைக்கும். மன திருப்தியுடன் செய்யும் காரியம் வெற்றி பெரும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கும். குடியிருக்கும் வீட்டை மாற்ற வேண்டிய சூழல் ஏற்படும். வாகன யோகம் உண்டு. எப்போதும் இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்படவும். வீட்டிற்கு தேவையான பொருள் சேர்க்கை உண்டாகும். எந்தவிதமான சர்ச்சைகளிலிருந்தும் விலகி, உங்கள் இலக்குகளில் கவனம் செலுத்த வேண்டும். உத்யோகத்தில் ஆதரவு பெருகும். ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதற்கு முன்பு உங்கள் நலம் விரும்பிகளின் ஆலோசனையை பெற்று செய்யவும். தொழில், வியாபாரம் செழிப்படையும்.*

***வணங்க வேண்டிய தெய்வம்: கால பைரவர், ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம், பரிகாரம்: பைரவருக்கு நெய் தீபம் அர்ச்சனை, சந்திராஷ்டமம்: மாசி 30 (14/03/2025) வெள்ளிக்கிழமை பகல் 1.27 மணி முதல் பங்குனி 2 (16/03/2025) ஞாயிற்றுக்கிழமை இரவு 12.43 மணி வரை.***

---




***மீன ராசி அன்பர்களே,*** *இந்த மாதம், எதிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்கும். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம். எல்லா விஷயங்களிலும் நிதானத்தை கடை பிடிக்க வேண்டியது அவசியம். மனதில் ஒரு விதமான குழப்பங்கள் நிலவினாலும் அது நாளடைவில் சரியாகிவிடும். சின்ன விஷயங்களால் மன நிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் முக்கிய நிகழ்ச்சிகள் நடக்கும். புது வீடு மாற்றம் ஏற்படும். வெளியிடங்களில் வீண் விவாதங்களை தவிர்க்கவும். தடைப்பட்ட திருமண பணிகள் மீண்டும் தொடரும். பூர்வ புண்ணிய பாக்கியங்கள் கிட்டும். எதிர்பாராத மருத்துவ செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். குடும்பத்துடன் தூர பயணம் மேற்கொள்ள வேண்டிவரும். வாகனம் ஓட்டும் போது கவனமாக இருக்க வேண்டும். கோர்ட் வழக்குகளில் எதிர்பார்த்தபடி நல்ல தீர்ப்பு வரும். உங்களால் மற்றவர்கள் பயனடைவர். பயணங்கள் தொடர்பாக அலைச்சல், செலவுகள் ஏற்பட்டாலும் மனத்திருப்தி கொள்ளும் வகையில் நற்பலன் உண்டாகும். புது நண்பர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் கிட்டும். பெண்கள் வகையில் சில நன்மைகள் உண்டு. புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு தக்க பலன் கிடைக்கும். உத்தியோகம் தொடர்பாக திடீர் பயணங்கள் ஏற்படும். உத்யோகத்தில் மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் உயர் நிலை உண்டு. தொழில், வியாபாரத்தில் உள்ள சூட்சமங்கள் புரியவரும்.*

***வணங்க வேண்டிய தெய்வம்: நவக்கிரஹ செவ்வாய், ஸ்லோகம்: நவக்கிரஹ காயத்திரி, பரிகாரம்: சனீஸ்வர பகவானுக்கு நெய் தீபம், சந்திராஷ்டமம்: பங்குனி 2 (16/03/2025) ஞாயிற்றுக்கிழமை இரவு 12.43 மணி முதல் பங்குனி 5 (19/03/2025) புதன்கிழமை பகல் 12.20 மணி வரை.***



## பயணி தவறவிட்ட நகை பையை ஒப்படைத்த ஆட்டோ டிரைவர் நாகேந்திரன்

## நேர்மையை பாராட்டிய பரிசளித்த காவல் ஆணையர் திரு.ஜெ.லோகநாதன் IPS அவர்கள்

ஆட்டோவில் தவறவிட்ட 15 பவுன் தங்க நகைகள் மற்றும் செல்போன் அடங்கிய கைப்பையை திரும்ப ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுநருக்கு காவல் ஆணையர் பாராட்டு.

மதுரை மாநகர் தவிட்டு சந்தையைச் சேர்ந்த திரு.சரவணகுமார் தனது குடும்பத்தினருடன் தவிட்டு சந்தை பகுதியில் ஆட்டோவில் ஏறி தெப்பகுளம் பகுதியில் இறங்கியுள்ளார்.

அப்போது, 15 பவுன் நகைகள் மற்றும் செல்போன் அடங்கிய தனது கைப்பையை ஆட்டோவில் மறந்து வைத்துவிட்டு இறங்கியுள்ளார். இதுகுறித்து, அவர் தெப்பகுளம் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில் ஆட்டோவில் பயணிகளை இறக்கி விட்ட பின் ஆட்டோவில் ஒரு கைப்பை இருப்பதை பார்த்த ஆட்டோ டிரைவரான கோச்சடை பகுதியைச் சேர்ந்த நாகேந்திரன், தான் ஆட்டோவில் மேற்படி பயணியை ஏற்றிய மஹால் பகுதிக்கு வந்து கைப்பையை அவரிடம் ஒப்படைப்பதற்காக வந்துள்ளார். அந்த நேரத்தில் காவல் நிலை யத்திலிருந்து அழைப்பு வந்ததும் நேரடியாக நகைப் பை தன்னிடம் உள்ளதை தெரிவித்து காவல்நிலையம் சென்று 15 பவுன் தங்க நகை, ஒரு செல்போன் இருந்த பையை உரிமையாளரிடம் ஒப்படைத்தார். இதையறிந்த, மாநகர காவல் ஆணையர் முனைவர் திரு.ஜெ.லோகநாதன் IPS அவர்கள் ஆட்டோ ஓட்டுநர் நாகேந்திரனின் நேர்மையை பாராட்டி, அவருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை

## குட்கா, புகையிலைப் பொருட்கள் விற்ற கடைக்கு சீல்; ரூ.25 ஆயிரம் அபராதம்

இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.விவேகானந்த சுக்லா IPS அவர்கள் உத்தரவின் பேரில் பாணாவரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்களை விற்பனை செய்த நபர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் திரு.சுதாகர் அவர்கள் போலீசார் தலைமையில் குட்கா போன்ற புகையிலை பொருட்களை விற்பனை செய்த நபரின் கடைக்கு சீல் வைக்கப்பட்டு ரூ.25,000 அபராதம் விதிக்கப்பட்டது.

நிருபர்: A.R.முருகேசன்






# நிதி நிறுவன உரிமையாளரை மிரட்டி பணம் பறிக்க முயன்ற 8 நிருபர்கள் கைது

பத்திரிகை நிருபர்கள் எனக்கூறி, மிரட்டி பணம் பறிப்பதாக பல்வேறு புகார்கள் வந்த நிலையில் அதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர். இரா. ஸ்டாலின் IPS அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

இந்நிலையில் புதுக்கடை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ஜஸ்டின் ராஜ் என்பவருக்கு சொந்தமான நிதி நிறுவனத்தில் நீதிவலை பத்திரிகையின் நிருபர்கள் என்றுக்கூறி, புகார்தாரரின் நிதி நிறுவனத்தில் அதிகப்படியான வட்டி வாங்குவதாக புகார் வந்துள்ளது. இதுதொடர்பாக பத்திரிகையில் அவதூறு செய்தி வெளியிடாமல் இருக்க ஒரு லட்ச ரூபாய் தரவேண்டும் எனக்கேட்டு மிரட்டி உள்ளனர். பணம் கொடுக்க மறுத்த ஜஸ்டின்ராஜை அச்சுறுத்தி, அவரது சட்டை பையில் இருந்த ரூபாய் 5,000-த்தை எடுத்துவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஜஸ்டின் ராஜ் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் குலசேகரத்தை சேர்ந்த ஆன்டனி(51), கொல்லங்கோடு பகுதியை சேர்ந்த சுனில்(33), கருவாவிலை பகுதியை சேர்ந்த லால்(36), ஆற்றங்கரை பகுதியை சேர்ந்த செல்வராஜா(37), கன்னியாகுமரி பகுதியை சேர்ந்த சுரேஷ் கோபி(52), திருவட்டார் பகுதியை சேர்ந்த பெல்வின் ஜோஸ்(41), கீழபெருவிளை பகுதியை சேர்ந்த மணிகண்டன்(38) மற்றும் சின்ன முட்டம் பகுதியை சேர்ந்த சகாய போஸ்கோ(58) ஆகியோர் மீது புதுக்கடை போலீசார் வழக்குப் பதிவு செய்து அவர்கள் 8 பேரையும் கைது செய்தனர்.

பத்திரிகை நிருபர்கள் எனக்கூறி போலியாக இவ்வாறு பணம் பறிக்கும் செயலில் ஈடுபட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்.









திருப்பூர் மனநலம் பாதிக்கப்பட்ட மனிதரை மீட்டு அவருக்கு ஷேவிங் செய்து குளிப்பாட்டி புத்தாடைஅணிவித்து உணவளித்து புத்துணர்வு பெற்ற மனிதனாக மாற்றிய தீயணைப்பு வீரர் திரு.இளம்செல்வன் குவிந்து வரும் பாராட்டு. தீயணைப்பு துறை வீரர் இளம்செல்வன் உயிர்காக்க கூடிய இரத்ததானம் செய்து சுமார் 57 பேரின் உயிர்காத்த அரசு ஊழியர் என்பது குறிப்பிடதக்கது.

தலைமை நிருபர்: S.மாரிராஜா, திருப்பூர்.



## தேசிய அளவில் கராத்தே போட்டியில்

# தங்க பதக்கம் வென்ற பெண் தலைமை காவலரின் மகனுக்கு தென்காசி SP அரவிந்த் அவர்கள் பாராட்டு

ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான கராத்தே போட்டியில் தென்காசி மாவட்டம் புளியங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் தலைமை காவலர் திருமதி.சைலா அவர்களின் 9ம் வகுப்பு படிக்கும் மகன் முகில்வர்ஷன் என்பவர் போட்டியில் கலந்து கொண்டு தங்க பதக்கம் வென்றுள்ளார்.

இந்நிலையில் சிறுவனை பாராட்டும் விதமாக இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்கள் முகில் வர்ஷனுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டி மேலும் பல பதக்கங்களை வெல்ல தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிருபர்: ஆறுமுகசாமி, புளியங்குடி.



### சாலை போக்குவரத்து பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி, TNK பள்ளி நிர்வாகத்தின் சார்பாக, சாலை போக்குவரத்து, பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி, கவுந்தப்பாடி முக்கிய சாலைகள் வழியாக தொடங்கி, TNK பள்ளியில் நிறைவடைந்தது. பள்ளி தாளாளர், பழனிச்சாமி அவர்கள், கொடியசைத்து, பேரணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில்,பள்ளி முதல்வர், இருபால் ஆசிரியர் பெருமக்கள், மாணவ மாணவியர், ஈரோடு நகர தெற்கு போக்குவரத்து காவல் அதிகாரிகள், கவுந்தப்பாடி காவல் நிலைய ஆய்வாளர்கள், காவலர்கள் என கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தலைமை நிருபர்: கவுந்தி கண்ணன், கவுந்தப்பாடி





# கொடைக்கானல் பூம்பாறை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புறக்காவல் நிலையம் திறப்பு

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.பிரதீப் IPS திறந்து வைத்தார்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மேல் மலை கிராமமான பூம்பாறையில் புதிய புற காவல் நிலையத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.பிரதீப் IPS திறந்து வைத்தார். கொடைக்கானல் மேல் மலை கிராமங்களான பூம்பாறை, மண்ணவனுர், கிளாவரை, கவுன்சி, கூக்கால் உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் உள்ளது.

இந்த நிலையில் இங்குள்ள கிராமங்களில் எதேனும் அசம்பாவிதம் நடைபெற்றால் இது குறித்து குறைந்தது 20 கி.மீ. தொலைவில் கொடைக்கானலில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்து வந்தனர்.

மேலும் மலைசாலையில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக பயணம் செய்து வந்த நிலையில் மேல் மலை கிராமங்களுக்கு என தனியாக காவல் நிலையம் அமைக்க வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை எழுந்து வந்த நிலையில் இன்று பூம்பாறை கிராமம் பிரதான சாலையில் புற காவல் நிலையம் தொடங்கப்பட்டது. இதனை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.பிரதீப் IPS அவர்கள் ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், நீண்ட நாள் கோரிக்கை இன்று நிறைவேற்ற பட்டது. குறிப்பாக இந்த காவல் நிலையத்தில் ஒரு சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர் இங்கு இருப்பதாகவும், கிராமமக்கள் அளிக்கும் புகார்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் அதிக படியான சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் கிராமம் என்பதால் 24 மணி நேரமும் சிசிடிவி மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படும் எனவும் கஞ்சா, காளான் போன்ற போதை வஸ்துக்கள் குறித்து வாகன சோதனை செய்யப்படும் என தெரிவித்தார்.



மேலும் கடந்த ஆண்டு மட்டும் திண்டுக்கல் மாவட்ட அளவில் கஞ்சா, காளான் குறித்த 311 வழக்குகள் பதிய பட்டுள்ளதகாவும், இது 2023 ஆண்டை விட அதிகமானது என்றும், குறைந்த அளவில் கஞ்சா வைத்திருந்தாலும் அவர்களுக்கு பெயில் கிடைக்காத அளவில் வழக்கு பதியபடும் எனவும், அதே போல போதை காளான் வைத்திருந்தால் குண்டர் சட்டம் பாயும் எனவும், கஞ்சா வழக்கில் கைதானவர்களிடம் கஞ்சா எங்கு கிடைத்தது, யார் மூலம் கிடைத்தது, என்ற கோணத்தில் அவர்களை தொடர்ந்து கண்காணித்து, தீவிர விசாரணை செய்தும் அவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித் தார். மேலும் போதைக்கு அடிமையானவர்களை கண்ட றிந்து அவர்களுக்கு மறுவாழ்வு மையத்தில் வைத்து அவர்களை போதை பழக்கங்களில் இருந்து மீட்டெடுக் கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.மதுமதி அவர்கள், காவல் ஆய்வாளர் திரு.பாஸ்கரன் அவர்கள், காவலர்கள் மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்

## கோவை மாவட்டம் சூலூர் பகுதியில்

# கஞ்சா சாக்லேட் விற்பனை செய்த இளைஞரை கைது செய்த காவல் குழுவினர்

சமூகத்தின் நச்சாக விளங்கும் போதைப் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, போதைப்பொருள் இல்லாத கோவையை உருவாக்கும் பொருட்டு கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

அதன் அடிப்படையில் பெரியநாயக்கன்பாளையம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய பகுதியில் கஞ்சா சாக்லேட் விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் பெரியநாயக்கன்பாளையம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல்துறையினர் சூலூர் பேருந்து நிறுத்தம் அருகே சென்று சோதனை மேற்கொண்டனர்.

அப்போது கஞ்சா சாக்லேட்டை விற்பனைக்காக வைத்திருந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பைலோச்சன் பிஸ்வால் மகன் சத்யபிரதா பிஸ்வால்(34) என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 2 கிலோ 250 கிராம் கஞ்சா சாக்லேட் பறிமுதல் செய்து மேற்படி நபரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். இதுபோன்று போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டாலோ அல்லது சட்ட ஒழுங்கிற்கு எதிராக செயல்பட்டாலோ, ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.

இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவர்கள் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க பொதுமக்கள் தயங்காமல் அழைத்திடுங்கள்.

கோவை மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறை எண் 94981-81212 மற்றும் வாட்ஸ் அப் எண் 77081-00100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். தகவல் தெரிவிப்போரின் ரகசியங்கள் காக்கப்படும்.

நிருபர்.P.நடராஜ், கோவை.




**இந்த உலகில்**
**நீ மாற்றத்தை விரும்பினால்..**
**அதை முதலில்**
**உன்னிடமிருந்து ஆரம்பி..**
**உன்னை நம்பி நீ செயல்பட்டால்..**
**வாழ்வில் முன்னேற்றம் தானே வரும்.**

- ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்





திருச்சி கே,கே,நகர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில்

# சைபர் க்ரைம், போதைப் பொருள்களின் தீமை குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

## அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் லதா அவர்கள் உரை

திருச்சி மாநகரம் கே,கே,நகர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் சைபர் க்ரைம் குற்றங்கள் போதைப் பொருள் தடுப்பு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் அழகு சுப்பிரமணியன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட குழந்தைகள் நலக்குழு உறுப்பினர்கள் முனைவர் பிரபு, சியாமளா, பவுலின், சோபியா ராணி ஆகியோர் பங்கேற்றனர்.

குழந்தைகள் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு போதைப்பொருள் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்கு உடல், மன அளவில் ஏற்படும் பாதிப்புகள், சமுதாயம் சார்ந்த பிரச்சினைகள் குறித்தும் அறிவுறுத்தினர்.

இணைய வழியினால் ஏற்படக்கூடிய சைபர் க்ரைம் குற்றங்கள் குழந்தை நலக்குழுவின் பணிகள் செயல்பாடுகள் குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி எண் 10 9 8 குறித்தும் கண்டோன் மெண்ட் அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் லதா பேசினார்.

கல்வியின் அவசியம், குழந்தை திருமண தடுப்பு, பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாத்தல், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் குறித்தும் அவர் பேசியது மாணவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும், பாலின சமத்துவம், குழந்தைகள் உரிமை, மனித உரிமை குறித்து விழிப்புணர்வு வழங்கினார்.

உதவி தலைமை ஆசிரியர்கள் செல்வம் வரவேற்புரை ஆற்றினார். சங்கீதா நன்றி கூறினார் நிகழ்ச்சியில் 500-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.



சிறப்பு நிருபர்: S.மணிகண்டன், திருச்சி

# உத்தமதானபுரம் வேங்கட சுப்பையர் சாமிநாதன்

**19 பிப். 1855 – 28 ஏப். 1942**

உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் தமிழறிஞரும் பதிப்பாளரும் ஆவார். இவர் தமிழ்மொழிக்கு செய்த தொண்டினால் தமிழ் தாத்தா என்று சிறப்பிக்கப்பட்டார். தமிழ்மொழியில் அழிந்து போகும் நிலையில் இருந்த பண்டைய தமிழ் இலக்கியங்கள் பலவற்றை தேடித்தேடி அலைந்து பெற்று பதிப்பித்தவர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்கு தொண்டாற்றியவர்களுள் உ.வே.சாமிநாத அய்யர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர் 90-க்கும் மேற்ப்பட்ட புத்தகங்களை அச்சுப்பொறி தந்து, 3,000-க்கும் மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்திருநந்தார்.

உ.வே.சா. அவர்களின் விடா முயற்சியால் ஏடுகளில் இருந்த மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு போன்ற சங்ககால இலக்கியங்கள் அச்சு நூல்களாக வெளியிடப்பட்டது. உ.வே.சா. அவர்களின் 170 ஆம் ஆண்டு பிறந்த நாள் அவரது தமிழ் தொண்டை பாராட்டுவோம்.







**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438



# வர்மக் கலை

வர்மக் கலை என்பது தமிழ் மரபில் தோன்றிய ஒரு பழமையான தற்காப்புக் கலையாகும். இது உடலின் முக்கிய நாடிகள், நரம்புகள் மற்றும் புள்ளிகளை (வர்ம புள்ளிகள்) மையமாகக் கொண்டு செயல்படுகிறது. இது தற்காப்புக்காக மட்டுமல்லாமல், சிகிச்சை முறையாகவும் பயன்படுத்தப்படுகிறது. வர்ம சூத்திரம் எனப்படும் தமிழ் மருத்துவ அறிவியலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இக்கலை, பின்னாளில் தற்காப்புக் கலையாக வளர்ச்சி பெற்றது.

**வர்மக் கலையின் தற்காப்பு அம்சங்கள்:**

வர்ம புள்ளிகளை தாக்குதல்: உடலில் உள்ள 108 முக்கிய வர்ம புள்ளிகளை (சில ஆதாரங்களில் 126 என்றும் குறிப்பிடப்படுகிறது) துல்லியமாக தாக்குவதன் மூலம் எதிரியை உடனடியாக செயலிழக்கச் செய்ய முடியும். இவை நரம்புகள், மூட்டுகள், தசைகள் அல்லது உறுப்புகளுடன் தொடர்புடையவை. உதாரணமாக, திலர்த வர்மம் (புருவங்களுக்கு நடுவிலுள்ள புள்ளி) அல்லது படு வர்மம் போன்றவை தாக்கப்பட்டால் உணர்விழப்பு ஏற்படலாம்.

**ஆயுதமின்றி சண்டை:**

வர்மக்கலை பயிற்சியாளர்கள் கைகளாலோ அல்லது உடலின் இயக்கங்களாலோ தாக்குதலை நடத்தலாம். இதில் கரமடி (கை தடுப்பு), உடல் அசைவுகள் மற்றும் துல்லியமான அழுத்தங்கள் அடங்கும்.

**சிலம்பம் மற்றும் களரிப் பயிற்றுடன் தொடர்பு:**

வர்மக்கலை பெரும்பாலும் சிலம்பம் அல்லது களரிப்பயிற்று போன்ற தமிழ் தற்காப்புக் கலைகளுடன் இணைந்து கற்பிக்கப்படுகிறது. இதில் ஆயுதங்களைப் பயன்படுத்தியும் தற்காப்பு முறைகள் உள்ளன.

**பிராணாயாமத்தின் பங்கு:**

சுவாசப் பயிற்சிகள் (பிராணாயாமம்) மூலம் உடலின் ஆற்றலை சீர்படுத்தி, தாக்குதல் அல்லது பாதுகாப்புக்கு தயார்படுத்துவது இதன் முக்கிய அம்சம்.

**தற்காப்பில் வர்மக் கலையின் தனித்துவம்:**

இரட்டை நோக்கம்: வர்மக் கலை தாக்குதலுக்கும் (வர்ம அடி) சிகிச்சைக்கும் (வர்ம வைத்தியம்) பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, ஒரு வர்ம புள்ளியை தாக்கி எதிரியை செயலிழக்கச் செய்த பின், அதே புள்ளியை சரியாக அழுத்தி சிகிச்சையளிக்கவும் முடியும்.

**மறைந்திருக்கும் அறிவு:** இது பாரம்பரியமாக குரு-சிஷ்ய முறையில் மட்டுமே கற்பிக்கப்பட்டதால், தவறாக பயன்படுத்தப்படாமல் பாதுகாக்கப்பட்டது.

**மன மற்றும் உடல் ஒருங்கிணைப்பு:** தற்காப்புக்கு உடல் வலிமையைவிட மனதை ஒருமுகப்படுத்துதல் மற்றும் ஆற்றல் கட்டுப்பாடு முக்கியம்.

**வர்மக்கலை பயிற்சி:**

வர்மக்கலையை புத்தகங்கள் அல்லது இணையம் மூலம் கற்க முடியாது; இது ஆபத்தானது. முறையான ஆசானிடம் நேரடி பயிற்சி அவசியம். பயிற்சியில் உடலின் வர்ம புள்ளிகளை அறிதல், அவற்றை தாக்கும் முறைகள், மற்றும் பாதுகாப்பு உத்திகள் கற்பிக் கப்படுகின்றன. தமிழ்நாடு மற்றும் கேரளாவில், குறிப் பாக குமரி மாவட்டத்தில், இது இன்னும் சில இடங் களில் பயிற்சியாகவும் சிகிச்சை முறையாகவும் உள்ளது.

**சித்தர்களின் பங்களிப்பு:**

சித்தர்கள், குறிப்பாக அகத்தியர், வர்மக்கலையை உருவாக்கியவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் இதை மருத்துவத்திற்காகவும், தற்காப்பிற்காகவும் பயன்படுத்தினர். அகத்தியரின் "கம்பு சூத்திரம்" போன்ற நூல்களில் சிலம்பத்துடன் வர்மத்தின் தொடர்பு குறிப்பிடப்பட்டுள்ளது. முடிவாக, வர்மக்கலை ஒரு தற் காப்புக் கலையாக மட்டுமல்லாமல், உடல் மற்றும் மன ஆற்றலை ஒருங்கிணைக்கும் தமிழ் மரபின் அற்புத படைப்பாகும். இதை முறையாக கற்பதன் மூலம் சுய பாதுகாப்பையும், உடல் நலத்தையும் பேண முடியும்.

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438

# மாணவர்களே..!
# அவர்தான் MGR
# எம்.ஜி.ராமச்சந்திரன்



***எம்ஜிஆர் ஒரு பள்ளிக்கு பேச சென்றார், அப்போது அவர் பேசியது...***

“மாணவர்களே, நான் இன்று முதல்வர் இந்திராகாந்தி முதல் அமெரிக்க அதிபர் வரை பேசும் செல்வாக்கு உடையவன். என்னை அனுதினமும் சந்திக்க காத்துக் கிடக்கும் கோடீஸ்வரர்கள் ஏராளம்; உதவி பெற ரிசையில் நிற்போர் ஏராளம்; தினமும் என் வீட்டில் பசியாருவோரும் ஏராளம். அப்படிப்பட்ட என்னால் வாங்க முடியாதது கல்வி.

இன்று மாகாண முதல்வர் என்றாலும் என் கல்வி நிலை 4ம் வகுப்புத்தான். எனக்கும் படிக்கும் ஆசை இருந்தது. ஆனால் அதைவிட பலமடங்கு வறுமை வீட்டில் இருந்தது. எனவே நடிக்க வந்துவிட்டேன்.

எனக்கு மட்டுமல்ல, உலகில் எத்தனையோ பேருக்கு கிடைக்காத பாக்கியம், கல்வி. அது உங்களுக்கு கிடைத்திருக்கின்றது. அரசியல் எப்பொழுதும் செய்யலாம்; உரிமைகளை எப்பொழுதும் கோரலாம்; ஆனால் படிப்பு உரிய காலத்தில் இல்லாவிட்டால் படிக்க முடியாது.

என் செல்வங்களே, எனக்கு கிடைக்காத கல்வி உங்களுக்கு கிடைத்திருக்கின்றது. அதை நல்ல முறையில் படித்து நாட்டுக்கும், வீட்டுக்கும் பயனுள்ள மனிதர்களாக வாழுங்கள். அதுதான் இந்த அரசின் முதல் கடமை. அதனால்தான் இன்றளவும் காமராஜரை என் வழிகாட்டியாக கொண்டு பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு என சோறு போட்டு படிக்க வைக்கும் முயற்சியினை எடுக்கின்றேன்.



“எனக்கும் அன்று இப்படி சோறு போட ஒரு அரசு இருந்திருந்தால், நான்காம் வகுப்பை தாண்டாதவன் எனும் அவமானத்தோடு உங்கள் முன் நின்று கொண்டிருக்க மாட்டேன்”

அரங்கத்தில் ஒரு சலசலப்பில்லை, மாணவர்கள் உண்மை உணர்ந்தனர். அவர்களை பெற்றவர்கள் கையெடுத்து அவரை வணங்கி கொண்டிருந்தனர்.

அவர்தான் MGR, எம்.ஜி.ராமசந்திரன்.

மக்களின் மனம் அறிந்ததாலேயே அவர் மக்கள் திலகமுமானார்.

ஓம் காளி ஓம் நமசிவாய






## கருடசித்தர்

Dr.பாலகிருஷ்ண சுவாமி

எரசை, தேனி மாவட்டம்.


# புலஸ்தியரின் வைத்திய, ரசவாத, ஞான ரகசியங்கள்

நம் பாரத நாடு தெய்வீக நாடாகும். பல இலட்சக்கணக்கான ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும், ஞானிகளும் நம் தேசத்தில் தோன்றி மக்களுக்கான நல்ல ஞான விசயங்களையும் பல விதமான சாஸ்திரங்களையும், பல கொடிய நோயை போக்கக் கூடிய சித்த மருந்துகளையும் கற்றுக் கொடுத்துள்ளனர். அந்த வகையில் நாம் இன்று பார்ப்பது புலஸ்திய முனிவராவார்.

**அகத்தியரின் முதல் சீடர் புலஸ்திய முனிவர்**

அகத்திய முனிவரின் முதல்சீடர் புலஸ்திய முனிவராவார். இவர் கமல முனிவரின் பேரன் என்று சொல்லப்படுகிறது. இவர் எப்பொழுதும் தவம் செய்து கொண்டே இருப்பார்.

புலம் என்றால் தவம் என்று அர்த்தமாகும். இவர் தவத்தினால் பலம் பெற்றவர் என்பதால் புலஸ்தியர் என்று பெயர் வந்தது.

புலஸ்தியரை பற்றி போகர் 7000 நூலில் கூறுகின்றார்.

அந்த பாடலைப் பார்ப்போம்..

*உருவான புலஸ்தியரின் மார்க்கம் கேளு*
*ஓகோ கோ நாதர்கள் அறிந்ததலில்லை*
*கருவான தேவரிஷி தன் வரத்தால்*
*கமல முனி தன் வயிற்றில் பிறந்த பரேன்*
*துருவான அகத்தியருக்கு புனித யோகன்*
*புருவான திருமந்திர உபதேசந்தான்*
*பாலருகில் புலஸ்தியர் என்றறையலாமே*

**விளக்கம்:** கமல முனியின் பேரன் புலஸ்தியன் என்றும், அகத்தியருக்கு பிரியமான சீடர் என்றும் அழைக்கப்படுகின்றார். புலஸ்திய முனிவர் சிவராஜ யோகியாவார். இவர் திருமந்திர உபதேசம் பெற்றவராவார். இதனால் இவர் புலஸ்தியர் என்று பலராலும் அறியப்படுகின்றார்.

புலஸ்தியர் திரண பிந்துவின் மகள் ஆவிருப்பு என்ற பெண்ணை மணந்ததாகவும் கூறப்படுகின்றது. புலஸ்தியருக்கு வாசு என்ற மகன் பிறந்ததாகவும் சொல்லபடுகின்றது.

அகத்தியர் தன் பாடலில் புலஸ்தியனே என்று தன் மாணவனை அன்போடு அழைத்திருப்பார். புலஸ்தியரை தன் அன்புச் சீடராக ஏற்றுக்கொண்டார். புலஸ்தியரும் குருவின் சொல்லை மீறாமல் குரு என்ன வழிகாட்டுகின்றாரோ அந்த வழியை முழு மனதுடன் பின்பற்றினார்.

**புலஸ்தியர் அகத்தியரிடம் தீட்சை பெறுதல்:**

தீட்சைகள் பல விதமான தீட்சைகள் இருக்கின்றன. தீட்சை என்பது குருவின் அருள் தீயினால் சிஷ்யர்களின் அறியாமை என்ற இருளை எரித்து சிஷ்யர்களுக்கு அருள் ஞான ஒளியைத் தருவதே ஆகும்.

பலவித தீட்சை இருந்தாலும் குருவின் ஆத்ம சிவ தீட்சையே முழுமையானதாகும். உண்மையாக தவ சிந்தனையோடு சிவ நெறியில் கடைபிடிக்கும் சிஷ்யர்களுக்கு ஆத்ம தீட்சையை குருநாதர் அளிப்பார்.

அந்த வகையில் அகத்தியரிடம் அனைத்து சாஸ்திரங்களையும் கற்று கடைசியாக சிவ ஆத்ம தீட்சையைப் பெற்றுக் கொண்டார். குருவின் கட்டளையை ஏற்றுக் கொண்டு பல ஸ்தலங்களுக்குச் சென்று சிவ நெறியை பரப்பினார். குருவின் ஆசீர்வாதத்தோடு தவவாழ்விற்குச் சென்றார்.


**பூதங்களுக்கு சாப விமோசனம் அளித்தல்:**

புலஸ்தியர் நீண்ட ஆண்டுகள் சிவ கடுந்தவம் செய்வதற்கு ஒரு குகையை தேர்ந்தெடுத்தார். அந்தக் குகை அருவிகள் நிறைந்த அடந்த காட்டிற்குள் இருந்தது. புலஸ்தியர் குகையை நெருங்கி குகையின் உள்ளே சென்றார்.

குகையில் வண்டுகளும் வௌவால்களும் பறந்து வெளியேறின. பின்பு குகையில் உள்ளே செல்லச் செல்ல ஒரு அசுர சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கிய புலஸ்தியர் உள்ளே சென்றார். அந்த குகை முழுவதும் காரிருள் சூழ்ந்து இருந்தது. அப்பொழுது பெரிய சப்தத்துடன் பார்க்கவே மிக பயங்கரமான பூதங்கள் இரண்டு கத்திக் கொண்டே புலஸ்தியரை சாப்பிட ஓடி வந்தன. பூதங்கள் தன் அருகில் வந்ததும் கமண்டலத்தில் உள்ள நீரை எடுத்து பூதங்களின் மேல் ஓம் நம சிவய என்று தெளித்தார். உடனே அவர்கள் இரண்டு பேரும் முனிவர்களாக மாறினர்.

நீங்கள் இருவரும் யார் என புலஸ்தியர் கேட்டார். அதற்கு அந்த முனிவர்கள், நாங்கள் ஒரு குருவிடம் சிஷ்யர்களாக இருந்தோம். குரு எங்கள் இருவர் மேலும் முழு நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால், நாங்கள் அவர் மேல் முழு நம்பிக்கை வைக்கவில்லை. பின்பு நாங்கள் இருவரும் குருவுக்கு, குருத்துரோகம் செய்தோம். அதனால் குரு சாபம் பெற்று பூதங்களாக குகையில் அடைபட்டு விட்டோம்.

பின்பு குரு எங்கள் மீதும் மீண்டும் இரக்கம்




கொண்டு, சாபம் விலகுவதற்கு வழியை எங்களுக்கு கூறினார். குருவின் மேல் முழு நம்பிக்கை உள்ள ஒருவர் குரு பக்தியில் சிறந்து விளங்கும் சீடன் ஒருவன் உங்கள் மேல் சிவனை நினைத்து தண்ணீர் தெளிக்கின்றானோ, அப்போது நீங்கள் சாப விமோசனம் பெறுவீர்கள் என்று வாக்கு கொடுத்தார்.

அந்த வகையில் பல ஆயிரம் ஆண்டுகளாக உணவு, உறக்கம் இல்லாமல் குகையில் பூதங்களாய் இருந்த எங்களுக்கு உண்மையான குரு பக்தி கொண்ட உங்களால் எங்களுக்கு சாப விமோசனம் கிடைத்தது என்று சொன்னார்கள். பின்பு அந்த இரண்டு முனிவர்களுக்கும் சிவ உபதேசம் செய்து தவம் செய்யுங்கள் என்று அனுப்பிவைத்தார். பின்பு புலஸ்தியர் சிவனை நினைத்து சிவ தவத்தை தொடர ஆரம்பித்தார்.

**புலஸ்தியர் எழுதிய நூல்கள்:**

புலஸ்தியர் வைத்திய வாதம் 1000, புலஸ்தியர் வாத சூத்திரம் -300, புலஸ்தியர் கற்ப சூத்திரம் -300, புலஸ்தியர் ஞான சூத்திரம் வைத்தியம் -100, வாதம் -100, புலஸ்தியர் வழலை சுருக்கம் - 13, புலஸ்தியர் வைத்திய வாதம் -800, புலஸ்தியர் ஞான கற்பம் - 200, புலஸ்தியர் சிவ ஞான சூட்சமம் - 2000 இன்னும் பல நூல்களை எழுதினார்.

ஜீவ சமாதி அடைதல்

சித்தர்கள் தங்கள் ஆன்மாவை பிறவி சூழற்சியில்

இருந்து தடுத்து, ஆத்ம ஓய்வு நிலை என்ற ஜீவ சமாதியை அடைவார்கள். அந்த வகையில் பொதிகை மலையில் பாபநாசம் என்னும் இடத்தில் ஜீவ சமாதி அடைந்தார்.

பின்பு ஜீவ சமாதியில் இருந்து எழுந்து தேரையருக்கு உபதேசம் செய்தார். பின்பு சிவ உபதேசம் தேரையருக்கு உபதேசித்துவிட்டு மீண்டும் ஆவுடையார் கோவிலில் ஜீவ சமாதி அடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

சித்தர்கள் ஒரு இடத்தில் ஆன்மாவை ஒடுக்கி ஆன்ம ஓய்வு என்ற ஜீவ சமாதி எடுப்பார்கள். பின்பு காலத்தின் தேவைக்கேற்ப சிவபெருமான் உத்தரவின்படி, மீண்டும் ஜீவ சமாதியில் இருந்து எழுந்து தங்கள் கடமையை செய்வார்கள்.

**மரணமில்லை பெருவாழ்வு என்றால் என்ன?**

மரணமில்லை பெருவாழ்வு என்பது நாம் இப்பொழுது இருக்கும் உடம்பை அழியாமல் வைப்பது மரணம் இல்லா பெருவாழ்வு இல்லை,

இப்பொழுது இருக்கும் உடம்பு என்றாவது ஒரு நாள் அழியும். ஆனால் இந்த உடம்புக்கு பல ஆயிரம் வருடம் அழியாமல் இருக்கும் ஆயுளைக் கூட்டிக் கொள்ளலாம். இது மரணம் இல்லாப் பெருவாழ்வு இல்லை.

நாம் சாதாரணமாக மரணம் அடைந்தால் அல்லது உடலை விட்டு ஆன்மா பிரிந்துவிட்டால், ஒரு குறிப்பிட்ட காலங்கள் கழித்து மீண்டும் தாயின் கருவிற்குள்ளோ அல்லது வேறு உயிரினங்களாகவோ நம் பாவ புண்ணிய கணக்கின்படி பிறக்க வேண்டி வரும். மீண்டும் பிறந்தால், மீண்டும் இறப்பு ஒன்று உண்டு. இப்படியே பிறப்பது இறப்பதுமான பிறவி சுழற்சி சுழண்டு கொண்டே வரும்.

ஆனால், மரணமில்லை பெருவாழ்வு என்பது சித்தர்கள் தங்கள் உடலைவிட்டு அவர்கள் ஆன்மாபிரிந்தாலும் அவர்கள் மீண்டும் ஒரு தாயின் கருப்பைக்குல் சென்று பிறப்பதில்லை.

மாறாக சித்தர்கள் வேறொரு உருவத்தை எடுத்துக் கொள்வார்கள். சித்தர்கள் பிறந்த உடம்பு அழிந்தாலும், அவர்கள் தாங்கள் நினைத்து உடம்பை எடுத்துக் கொள்ளலாம். இப்படி எடுக்கும்போது, அவர்களுக்கு மரணம் இல்லை. இதையே மரணமில்லை பெருவாழ்வு எந்று சித்தர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையை அடைய சிவ தியானம் செய்வார்கள். இந்த நிலையை அடைந்த பின்பு பிரபஞ்ச நன்மைக்காகவே சித்தர்கள் இயங்குவார்கள்.

**ஜீவ சமாதி என்றால் என்ன?**

ஜீவ சமாதி என்பது ஆன்மாவின் ஓய்வு நிலையாகும். சித்தர்களுக்கு பல ஜீவ சமாதிகள் இருக்கும். ஒரு இடத்தில் ஓய்வாக ஜீவசமாதி அடைந்து பின்பு காலத்தின் தேவைக்கேற்ப மீண்டும் அவர்கள் ஆன்மா விளித்துக் கொண்டு எழுவார்கள்.

அப்படி எழும்போது அவர்கள் நினைத்த பறவைகளாகவோ, விலங்குகளாகவோ, விரும்பிய மனித உருவங்களோ எடுக்கும் சக்தியை சிவனிடம் இருந்து பெற்றுக்கொள்வார்கள். இந்த ஜீவ சமாதி நிலை என்பது நனவிற் பேருறக்க நிலையாகும்.

காலத்திற்கேற்ப தங்கள் பணிகளை செய்ய பூமியல் மீண்டும் எழும்புவார்கள். அனைத்து உலகத்திற்கும் செல்லக் கூடிய ஆற்றல் சித்தர்களுக்கு உண்டு. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உலகங்களுக்கும் சென்று தர்மத்தை நிலை நாட்டக் கூடிய ஆற்றல் சித்தர்களுக்கு உண்டு. சித்தர்கள் ஜீவ சமாதி இருக்கும்போது சிவனோடு அவர்கள் ஆன்மா கலந்து இருக்கும்.

**முக்தி அல்லது மோட்சம் என்றால் என்ன?**

சிவனோடு நிரந்தமாக கலத்தல் முக்தியாகும். சிவனடியார்களும் நாயன்மார்களும் சிவனோடு நிரந்தரமாக கலந்து சிவ மோட்சம் அடைவார்கள். ஆனால், சித்தர்கள் சிவ முக்தி அடைந்து சிவன் கட்டளைப்படி சிவனிடம் இருந்து பிரிந்து தர்மத்தைக் காக்க மீண்டும் பல உருவங்கள் எடுத்து, சிவனின் கடமையை செய்வார்கள். கடைமை இல்லாத நேரங்கலில் ஆன்மா ஓய்வு நிலை என்ற ஜீவசமாதியை எடுப்பார்கள்.

ஊழிக்காலம் வரும் வரை இந்த பணியை சித்தர்கள் செய்து கொண்டே இருப்பார்கள். அற வழியிலும், தர்ம வழியிலும் செல்பவர்கள் யாராக இருந்தாலும் ஈசனை அடைவார்கள்.

காகபுசுண்ட சித்தர் மரணமில்லை பெருவாழ்வு நிலையை அடைந்து பல ஊழிகளையும் பல பிரளயங்களையும் பல ஆயிரம் பிரம்மாக்களையும் கண்டவர். தேவைப்படும்போது தாய்க் கோழியின் குஞ்சுகள் அடைக்கலமாக ஒளிந்து கொள்வது போல அனைத்து சித்தர்களும் சிவனில் ஒடுங்குவார்கள்.

**புலஸ்தியர் வைத்திய சூத்திரம்**

திருவிருக்கும் பொதிகைமலை தன்னில் வாழும்
தெட்சிணாமூர்த்தி குரு பாதத்தை போற்றி
கருவழலை உருவெடுத்து மார்க்ஞ் சொல்லக்
கரிமுகனும் அனுமுகனுங் கமலத்தாளும்,
இருவினையை உருப்படுத்தும் வேதன் தேவி
இன்பமுட னிவர்களும் பதத்தைப் போற்றி
அருவுருவாய் விளங்கி மனத் தறிவாய் நின்ற
அப்பொருளை மெய்ப்பொருளும் அறிவோர் காப்பே!

**புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300**

ஆதியந்தம் நிறைந்ததொரு ஜோதிபாதம்
அன்பான ரிஷிகளும் பாதம்போற்றி
நீதியா யெனயாண்ட வகத்தீசர் பாதம்
நினைந்துருகிப் போற்றி செய்து நேரமையாகச்
சோதியெனு மம்பிகைப்பெண் பாதம் போற்றித்
தொல்லுலகில் ரசவாதம் நிலைக்க வேண்டி
பாதிமதி சடையணிந்தோர் பாதம் போற்றிப்
பகருகிறேன் சூஸ்திரமுந்நூறுந்தானே

நம் சித்தர்கள் சொன்ன வழியில் நாம் கடைபிடித்து நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.

மாமனிதர்

# அபுல்கலாம் ஆசாத்



தம்பி, உன் மனஉறுதியைப் பாராட்டுகிறேன். எங்கள் ரகசியப் புரட்சி இயக்கத்தில் சேருவது என்றால், சாவோடு விளையாடுவதாகும். பலிபீடத்தில் தலைசாய்க்கத் தயாராக இருப்பவர்கள்தாம் எங்கள் பாசறைக்கு வருவார்கள்'' என்றார் ஷியாம். ''அதற்கும் தயாராகத்தான் வந்திருக்கிறேன். துப்பாக்கி தூக்க வேண்டுமா; வெடிகுண்டு வீச வேண்டுமா? கட்டளையிடுங்கள்... காத்திருக்கிறேன்'' என்றார் ஆசாத்.

''சிங்க இளைஞனே... இப்படி உன் சிந்தையில், தேசபக்தி ஊற்றெடுக்கக் காரணம் கூற முடியுமா?'' என்றார் ஷியாம். ''காரணமா? அவனைத்தான் வைஸ்ராய் கர்ஜான் தோரணமாகக் கட்டி வைத்திருக்கிறானே; பெற்ற தாயை வெட்டிப் பிளப்பதுபோல் வங்கத்தைப் பிளக்கிறானே? இந்துக்களுக்கு ஒரு மாநிலமாம்; இஸ்லாமியர்களுக்கு ஒரு மாநிலமாம். இஸ்லாமியர்களும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சோதரர்களே? இரண்டு கண்களுக்குமிடையே பரங்கியர் பள்ளம் பறிப்பதை எவர்தான் அனுமதிக்க முடியும்? என்னை உங்கள் பாசறைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று அன்புக் கட்டளையிட்டார் ஆசாத்.

இந்த உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்த போதுதான் ஷியாமையே முதல்முறையாகச் சந்தித்தார், ஆசாத். அப்போதுதான், ''தம்பி... நீ யாரைப் பார்க்க விரும்புகிறாய்'' எனக் கேட்டார் ஷியாம். அதற்கு ஆசாத், ''வங்கத்துப் புரட்சி வீரர் ஷியாம் சுந்தர் சக்கரவர்த்தியை'' என்றார். ''இதற்கு முன்னர் அவரைப் பார்த்திருக்கிறாயா'' என்று ஷியாம் கேட்டபோது... ''இல்லை. ஆனால், இறைவனின் சந்நிதானத்தில் பக்தன் நிற்பதுபோல், இப்போது அவர் முன்னிலையில்தான் நின்று கொண்டிருக்கிறேன்'' என்று சாதுர்யமாகப் பதிலளித்தார் ஆசாத். இதற்குப் பின்தான் அந்தப் புரட்சியாளரின் வழியில் பயணமானார், ஆசாத்.

''தூக்கு மேடையே அழைத்தாலும் நமது ரகசியப் பணிகளை வெளியிடாத வீரர்களை மட்டும் சேர்த்துக் கொள்வோம்'' என்று பதிலளித்தார், ஆசாத். அத்துடன் மாறுவேடத்தில் பல மாநிலங்களுக்குச் சென்று புரட்சியாளர்களைத் தொடர்புகொண்டு ரகசிய விடுதலை இயக்க அமைப்புகளை அமைத்தார்.

புரட்சி விதைகளுக்குப் புதிய விடியல் கிடைக்க வெளிநாடுகளுக்குப் பயணமானார். அந்தச் சந்தோஷத்தில் தாயகம் திரும்பிய ஆசாத், 'அல் ஹிலால்' என்ற உருது ஏட்டை ஆரம்பித்து...இஸ்லாமிய சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தினார். தொடர்ந்து ஆங்கிலேய அரசுக்கு அச்சுறுத்தலாக விளங்கினார். அந்த அரசுக்கு எதிராக, 'வெள்ளையனே வெளியேறு' என்கிற தீர்மானம், இவருடைய தலைமையில் நிறைவேற்றப்பட்டபோது, அவருடைய கைது படலமும் ஆரம்பமானது.

ஆசாத், சிறையில் இருந்த நேரத்தில்தான், 'அவருடைய மனைவி இறந்து போனார்' என்கிற செய்தியுடன் வந்திருந்தது ஒரு தந்தி. பின்னர், சிறையிலிருந்து விடுதலையான ஆசாத்தை வரவேற்க இரண்டு லட்சம் மக்கள் குழுமியிருந்தனர். இன்னிசை வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன.

இதனைக்கண்ட ஆசாத், அதை ஏற்பாடு செய்திருந்த லபன்யா பிரபா டட்டாவை அழைத்து, ''எதற்கம்மா பேண்டு வாத்தியம்'' என்றார்.

''என்ன, இப்படிக் கேட்கிறீர்கள்? உங்களை வரவேற்கத்தான்'' என்றார், லபன்யா.

''ஏனம்மா... நான் மட்டும் விடுதலையானால் போதுமா? என்னைவிடக் கொடிய சிறைவாசம் அனுபவித்த பல்லாயிரம் தொண்டர்கள் இன்னும் விடுதலையாகவில்லையே... பேண்டு வாத்தியத்தை நிறுத்தச் சொல்லுங்கள்'' என்று சொன்னவரை, வரவேற்க லட்சம் பேர் குழுமியிருந்தபோதும்... 'தன்னை வரவேற்க வேண்டிய அன்புத் துணைவி இப்போது இல்லையே... வீடு வெறிச்சோடி கிடக்கிறதே' என்ற நிலையில், தன் ஆசை மனைவியின் சமாதியை நோக்கிச் சென்றார் ஆசாத்.

கண்களிலிருந்து வழிந்த நீரைத் துடைத்தபடி,. காரில் கிடந்த ஒரு மாலையை எடுத்து, தன் அன்பு மனைவியின் சமாதியில் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவர், தனது வாழ்க்கைத் துணையைக் கடைசியாகச் சந்தித்தது அங்கேதான்.

''ஏனம்மா... உன் கணவருக்கு இந்த வம்பு? நம் இனத்தாரெல்லாம் ஒருவழியில் போகும்போது, உன் கணவருக்கு மட்டும் தனிவழியா? காங்கிரஸ், காந்தி என்று போனால் உன்னோடு வாழ முடியாது என உன் கணவரிடம் சொல்லிவிடு'' என ஒருவர், ஆசாத் மனைவியிடம் உபதேசம் சொல்ல...

அவரை புன்முறுவலுடன் பார்த்த ஆசாத்தின் மனைவி, ''அம்மா... அவரைக் கணவராக அடைய மாதவம் செய்திருக்க வேண்டும். இனவெறியைக் கொன்ற உயர்ந்த தேசபக்தன்தான் உண்மையான முசல்மானாக இருக்க முடியும். எனவே, அவரைக் கணவராக அடைந்ததிலே நான் பெருமைப்படுகிறேன்'' என்று முகத்தில் அறைந்தாற்போன்று பதிலளித்தார். அந்த உன்னத அன்புக்கு ஈடுசெலுத்தத்தான் தன் அன்பு மனைவியின் சமாதிக்கு அப்படி ஓடோடிச் சென்றார் ஆசாத்.

''பிளாட்டோ, அரிஸ்டாட்டில், பிதாகரஸ் ஆகிய மூவரும் சேர்ந்த ஆளுமை இவர்'' என்று காந்தியடிகளால் புகழப்பட்ட அபுல் கலாம் ஆசாத், தன்னுடைய 70-வது வயதில் காலமானார்.

''மதவாதத்தை ஒரேடியாகக் குழிதோண்டிப் புதையுங்கள்'' என்பதுதான் ஆசாத், மாணவர்களுக்கு எப்போதும் கூறும் அறிவுரையாக இருந்தது. அது, மாணவர்களுக்கு மட்டுமல்ல... எல்லோருக்கும்தான்!



# சிவ யோகம்

மனித உடல் - உயிர்செல்களை புதுபிக்கும் ஓர் அற்புத கலை ஆகும். மூலாதாரம் என்னும் உயிர் தாதுவை (குண்டலினி-பேஸ்) மேல் ஏழுப்பியும்,
திருநீரு- சுத்த வித்தை அல்லது அண்ணாக்கில் (நியூட்ரல்) இருந்து சுரக்கும் நீரை உண்டும், இரண்டையும் ஒரு முறையான அளவில் இணைத்து செய்யும் கலைக்கு சித்தர்கள்-ஞானிகள் சிவயோகம் என்பர்கள்.

இந்த கலையை பயின்றவர்கள் இயற்கையை வென்றவர்கள் ஆவார்கள். இது பிராணனின் துணை கொண்டு இக்கலையை செய்வது ஆகும்.

**மிக ஆழமாக சிந்திக்கவேண்டிய உண்மைகள்...**

பிராணிகள், மனிதன் ஆகியவைகள் ஒரு நிமிடத்தில் சுவாச எண்ணிக்கையும் அதனால் கிடைக்கும் நிறைந்த ஆயுள் ஆண்டும்.

சுவாசத்தின் அவசியதை உணர்க..

முயல் – ஒருநிமிடம் 38-39 (ஆயுள் ஆண்டு-8)
புறா – ஒரு நிமிடம் 36-37 (ஆயுள் ஆண்டு 8-9)
நாய் – ஒரு நிமிடம் 31-32 (ஆயுள் ஆண்டு 13-14)
பூனை – ஒரு நிமிடம் 24-25 (ஆயுள் ஆண்டு 12-13)
குதிரை – ஒரு நிமிடம் 18-19 (ஆயுள் ஆண்டு 48-50)
யானை ஒரு நிமிடம் 11-12 (ஆயுள் ஆண்டு 160)
ஆமை ஒரு நிமிடம் 3-4 (ஆயுள் ஆண்டு 450)
மனிதன் 14-15 ஒரு நிமிடம் (ஆயுள் 100-120 வாழலாம்.. ஆனால்...?)

ஏற்றி இறக்கி இருகாலும், பூரிக்குங்
காற்றைப் பிடிக்கும் கணக் கறிவாறில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வார்க்குக்
கூற்றை உதைக்குங் குறி யதுவாமே

– திருமூலர்

பொருள்: இருகாலும்- சூரியகலை, சந்திரகலை கூற்றை உதைப்பது- மரணதை ஏர்படுத்தும் எமனை துரத்துவது ஆகும். மனதை அடக்கி- ஒருநிலை படுத்தி செய்யப்பட வேண்டும். பூரகம், கும்பகம், ரேசகம் –என்ற முறையை அறிந்து முறை முறையாக செய்யப்பட வேண்டும்.

உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை
கருத்தினால் இருத்தியெ கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்
அருள் தரித்த நாதர் பாதம் அம்மைபாதம் உண்மையே.

– சிவவாக்கியர்

இப் பயிற்சிக்கு சிவம் என்ற பேரியக்க சக்தியை பற்றிய தெளிவு வேண்டும். குருவின் ஆசி வேண்டும்.

- திருமந்திர சிவயோக வகுப்பில் இருந்து சித்தர்களின் குரல்.

# அஜினோமோட்டோ எனும் விஷம்

**இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்..**

அஜினோமோட்டோ எப்படி ஒரு உணவின் சுவையை கூட்டுகிறது? அது உடலுக்கு தீங்கு விளைவிப்பதாக ஏன் கூறப்படுகிறது? அஜினோமோட்டோ ஒரு சுவை கூட்டும் உப்பு... அதை சர்க்கரை என்றும் சொல்லலாம்...!

பொதுவாக எல்லா சீன வகை உணவுகளில், சுவை கூட்ட சேர்க்கப்படும் இந்த அஜினோமோட்டோ பற்றி, நாம் என்ன அறிந்து வைத்திருக்கிறோம் என்றால்... அதை சிறிது தூவினால், உணவு ருசிக்கும். ஆனால் அதிகமாக பயன்படுத்தினால் முடி கொட்டும் அவ்வளவு தான் என்று.

ஆனால் உண்மையில் இதன் வரலாற்றை அறிந்தால்? அஜினமோட்டோ என்பது நாம் நினைப்பது போல, அது ஒரு கடல் உப்பின் பெயரல்ல, அது ஒரு நிறுவனத்தின் பெயர், ஜப்பானில் 1917 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தின் பெயரே அதன் பொருளுக்கும் ஒட்டிக்கொண்டது.

உண்மையில் இந்த உப்பின் பெயர் Monosodium glutamate(MSG) என்பதாகும், இதனை மருத்துவ உலகில் slow killer என்கிறார்கள். ஜப்பான் தலைநகர் டோக்கியோ, சிவோவை தலைமையிடமாக கொண்டு, கிகுனே இகெடா என்பவரால், 1917-ல் இந்த அஜினோமோட்டோ தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது,



அப்போது கடல் படுகைகளில் வளரும் ஒரு பூஞ்சை மற்றும் பாசி செடி (Seaweed) வகைகளில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு வகை உப்புதான் monosodium ஆகும். முதலில் அது தயாரிக்கப்பட்ட விதம் என்னவோ உயர் தரமானதாக இருந்தது.

ஆனால், 1917இல் அமெரிக்க நிறுவனத்துடன் கைகோர்த்து, வியாபார நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்சாலையில், Glutamate என்னும் செயற்கை அமிலத்தையும், அந்த monosodium உப்போடு கலந்துவிட்டு வியாபாரத்தை அதிகப்படுத்தினர்.

Glutamate என்பது ஒரு அடிமைப்படுத்தும் காரியமாகும். ஒருமுறை உண்டால், மீண்டும் மீண்டும் சுவைக்க தூண்டும் போதை பொருள் போன்றதொரு சுவையூக்கி ஆகும். முதலில் இந்த glutamate ஐ உபயோகித்து Artificial Sweetener என்னும் Aspar- tame ஐ தயாரித்து வந்தனர். பிறகு இதன் அபாயமறிந்து, அமெரிக்காவில் தடை செய்துவிட்டனர் ஆனால் அதன் மறுஉருபமே இந்த அஜினோமோட்டோ உப்பாகும்.

இன்றைய அவசர உலக சமையல் குறிப்புகளில், தவறாமல் இடம்பெறும் இந்த அஜினோமோட்டோ உப்பை பயன்படுத்தாத நாடுகளே இல்லை எனலாம்.

முன்பெல்லாம் சைனீஸ் வகை உணவுகளில் தான், அஜினோமோட்டோ தூவப்படும் என்ற மாயை போய், தமிழகத்தில் ரசத்திலும் இதை தூவ ஆரம்பித்து விட்டார்கள். அது நாம் விரும்பியும், விரும்பாமலும் நம் நாவை அந்த சுவைக்கு அடிமைப்படுத்துகிறது.

குறிப்பாக குழந்தைகள், அவர்கள் உண்ணும் பாக்கெட் சிப்ஸ், பிஸ்கட், நூடுல்ஸ், இன்ஸ்டன்ட் சூப், மசாலா ஐட்டங்கள், டின்னில் வரும் மீன், சிக்கன், ரெடிமேட் சப்பாத்தி, பரோட்டா, சமோசா, பப்ஸ், சாஸ் வகைகள், சோயா பொருட்கள், சாக்லேட்கள் என எல்லாத்திலும் அஜினோமோட்டோ உண்டு

உண்பதால் வரும் பக்க விளைவுகள்:

1. ஆணோ பெண்ணோ இருபாலருக்கும் முடி கொட்டுவது உறுதி.

2. Glutamate இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகப்படுத்துவதால், அதிகமான பசி எடுக்கிறது.

நாம் உணவை அடிக்கடி உண்ண உண்ண ஊளைச்சதை போடுகிறது, பிறகு அதை குறைப்பது மிககடினம். உடல் எடை கூடினால், தானாக சுகரும் இதய நோயும் வரும்.

3. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு, இந்த அஜினோமோட்டோ கொடிய விஷமாகும். 5 வயது குழந்தைக்கும் தீராத தலைவலியை உருவாக்கும்.

4. நரம்பு மண்டலத்தில் அதீத உற்சாகத்தை உருவாக்கி, பிறகு பலஹீனத்தை உண்டாக்கி விடும்.

5. இருதய நோய்களாக அதிபயங்கர துடிப்பும் சில நேரம் வலியும் உருவாக்கும்.

6. முகத்தில் எந்நேரமும் ஒரு எரிச்சல் இருப்பது போலவே சிலர் உணருவார்கள், அரிப்பும் தோன்றும், சிலரது முகம் கருத்திருக்கும்.

7. வழக்கமாக இரத்த கொதிப்பு, தைராய்டு, நீரிழிவு, ஆஸ்துமா, உணவு ஒவ்வாமை , அதீத வியர்வை சுரப்பியால் உண்டாகும் Dehydration என்னும் நீர்ச்சத்து குறைதல், கண்களில் ரெட்டினா குறைபாடு எல்லாம் உருவாக அஜினோமோட்டோ காரணியாகிறது. இவை எல்லாம் ஒரு நாள், நம்மை புற்றுநோயிடம் இழுத்துச்செல்லும்.

அஜினோமோட்டோவை தவிர்ப்போம்...

# சேர்ந்து வாழ பிறப்பித்த உத்தரவை பின்பற்றாத நிலையிலும் மனைவி ஜீவனாம்சம் பெற முடியும்






'கணவருடன் சேர்ந்து வாழ நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்றாத நிலையிலும், கணவரிடமிருந்து மனைவி ஜீவனாம்சம் பெற முடியும்' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் கடந்த 2014-ஆம் ஆண்டு மே 1-ஆம் திருமணமான பெண், 2015-ஆம் ஆகஸ்ட மாதத்தில் கணவரை விட்டுப் பிரிந்து, தாய் வீட்டுக்குச் சென்றுள்ளார். அதைத்தொடர்ந்து, மனைவியை தன்னுடன் சேர்ந்து வாழ உத்தரவிடக்கோரி அவருடைய கணவர் ராஞ்சி குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணையின்போது, கணவர் இல்லத்தில் கார் வாங்க ரூ.5 லட்சம் வரதட்சணை கொடுக்க வேண்டும் கொடுமைப்படுத்துவதாகவும், கணவருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாகவும் மனைவி தரப்பில் எழுத்துபூர்வமாக புகார் தெரிவிக்கப்பட்டது. மேலும், 'கணவர் இல்லத்தில் தான் கழிவறையையும், உணவு தயாரிக்க விறகுக்குப் பதிலாக சமையல் எரிவாயு அடுப்பை பயன்படுத்திக்கொள்ளவும் அனுமதித்தால் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன்' என்றும் மனைவி தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதனடிப்படையில், கணவருடன் சேர்ந்து வாழ மனைவிக்கு குடும்பநல நீதிமன்றம் கடந்த 2022-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி உத்தரவிட்டது. ஆனால், இந்த உத்தரவுக்கு கட்டுப்படாத அவர், கணவரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி குடும்பநல நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், அவருக்கு மாதம் ரூ.10,000 வழங்க கணவனுக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து கணவர் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், 'கணவருடன் சேர்ந்து வாழ குடும்பநல நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மனைவி பின்பற்றாததோடு, அதை எதிர்த்து மேல்முறையீடும் செய்யவில்லை. அத்தகைய சூழலில், அவர் ஜீவனாம்சம் பெறும் தகுதியை இழக்கிறார்' என்று தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து மனைவி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், 'குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 125(4)-இன் கீழ் திருமண உரிமைகளை மீட்டெடுக்க நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மனைவி மீறுவது, அவருக்கு ஜீவனாம்சம் மறுக்கப் போதுமானதா என்ற கேள்விக்கு பல உயர்நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகள் மாறுபட்டதாகவும், முரண்பட்டதாகவும் உள்ளன. இந்த விவகாரத்தில் நிலையான கருத்து எதுவும் நீதிமன்றங்களால் வழங்கப்படவில்லை. இந்த பல்வேறு தீர்ப்புகளை ஆராய்ந்ததில், குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 125, மனைவியின் ஜீவனாம்ச உரிமையை நிலைநிறுத்துவதற்கு சாதகமாகவே உள்ளது. மேலும், கணவரின் வேண்டுகோளின் அடிப்படையில் திருமண உறவை மீட்டெடுப்பதற்கு பிறப்பித்த உத்தரவை மனைவி பின்பற்றாதது, பிரிவு 125(4)-இன் கீழ் ஜீவனாம்சம் பெரும் தகுதியை உடனடியாக ரத்து செய்யப் போதுமானதாக இருக்க முடியாது.

மாறாக, தனிப்பட்ட வழக்கின் தன்மை, சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள், கணவருடன் சேர்ந்து வாழ மறுப்பதற்கு மனைவி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஜீவனாம்சம் பெறும் தகுதியை முடிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு வழக்கிலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதால், இந்த விவகாரத்தில் கடுமையான விதிகளையும் வகுக்க முடியாது' என்று தீர்ப்பளித்தனர்.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**



JCB, டிப்பர் வாடகைக்கு கிடைக்கும்
எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் தரமான முறையில் கட்டி தரப்படும்
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ் சிறந்த முறையில் செய்து தரப்படும்
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
Prop: S.அன்வர்தீன் 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு,
பாலக்கரை, திருச்சி- 620 008.

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




–::: தொடர்புக்கு :::–

**786 78 28 203, 638 298 5562**

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO